புதுக்கோட்டை ஸமஸ்தான

யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] **1941-ம் ௵ மார்ச்சு ௴ 8௳** [ந. **34.**

பிரஸங்கம் **XXXIV.**

யுத்தகாலத்திய இந்தியா பலவிதத் தோற்றங்கள்.

இந்த அறிக்கையில் மற்றோர் பாகத்தில் நமது நிலயத்தின் புதுமுறைகளைப் பற்றி—கிராமாந்தரங்களுக்கு தற்போது நடக்கும் யுத்த சினிமாக்களைக் காட்டுவதைப்பற்றி—வாசிப்பீர்கள். இந்த வேலைதான் என்னை சுமார் 2,000 மைல் ரயில் பிரயாணம் செய்யச் செய்தது. வழியில் அநேக சம்பவங்கள் எனக்கு மிக்க ஸ்வாரஸ்யமாக இருந்தன. நாட்டுப்புறத்து அம்மாஞ்சி பட்டணம் பார்த்த மாதிரி அவைகளில் அநேகம் தோன்றின போதிலும் அவைகளைத் தங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

நான் சத்துருவைப் பார்த்தேன்.

பங்களூருக்கும் பம்பாய்க்குமிடையில் இந்த யுத்தத்தில் கலந்து கொண்டவர்களுடன் பேச சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர்கள் நல்ல வாலிபர்கள். தேகக் கட்டுள்ளவர்கள். சவுல் பேர்வழிகள். அவர்கள் 3-வது வகுப்பு வண்டிகளில் நெருக்கியடித்து உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்; அவர்கள் சாமான்கள் என்றது அவர்களுடைய அரை நிஜார்கள்தான்; ரயிலில் இடையிடையே ஆயுதந்தாங்கிய திடசாலிகளான இந்தியத்துருப்புகளும் இருந்தன; இவைகள் குறிக்கத்தக்கனவாயிருந்தன. அதன் ரகஸ்யமென்னவென்றால்--அவர்கள்தான் எதிரிகள். வட—ஆபிரிக்காவில் இருந்து புதிதாய் கப்பல்களில் பம்பாயில் வந்து இறங்கி யுத்தத்தின் பாக்கிகாலத்தை சிறைவாசத்தில் கழிக்கச் சென்றுகொண்டிருந்த ஆயிரக்கணக்கான இதாலியக் கைதிகள் இவர்கள்.

"ஓஸோலிமியோ" என்று பாடி முடித்த சற்று கருத்த அரை நிர்வாண மான அழகான ஒரு வாலிபனை "என்ன சேதி, சௌக்கியமா?" என்று கேட்டேன்.

நெருக்கடியான அந்த வண்டியில் கண்டா கண்டபடி படுத்திருந்த 5, 6 பேர்களிடமிருந்து "ஆ......ம்; இருக்கெம்" என்று பதில் வந்தது. அவர் களுக்குத் தெரிந்த இங்கிலீஷ் அவ்வளவுதான். பாக்கிப்பேச்சை எனக்குத் தெரிந்த அரைகுறை பிரெஞ்சில் நடத்தவேண்டி வந்தது. அவர்கள் பார்டியாவை விட்டு குண்டக்கல்லுக்கு வருவதில் அவர்களுக்கு வருத்தமில்லை என்பது தெரிந்தது. அதற்குள்ளாக........வது பஞ்சாப் படையைச் சேர்ந்த ஒரு சுறுசுறுப்பான நாயக் அடுத்தவண்டியிலிருந்து தலையை நீட்டி என்னைப்பார்த்து உருதுவில் எட்டிப்போகச் சொன்னான். நான் "அச்சாஜி! மத்கப்ராவோ; மைம் ஜெனரல் சாகேப் ஹைம்" (நல்லது; பயப்படாதே. நான் ஒரு ஜெனரல்) என்று நைச்சியமான புன் சிரிப்புடன் சொன்னேன், இச்சிறு ஏமாற்றுதலால் பாதகமில்லை என்று நினைத்தேன். என் சமயோசித புத்தியைக்கண்டு நானே மகிழ்ந்தேன்.

"தாங்கள் கமாண்டர்-இன்-சீப் சாகேப்பாக இருந்தாலும் அக்கரையில்லை; ஒருவரும் இக்கைதிகளை அண்டக்கூடாதென்று எனக்கு உத்தரவு. ஆகையால் நடையைக்கட்டும்" என்றான் அந்த பொறுப்புணர்ந்த இந்துஸ்தானத்து சிப்பாய். என் உருதுப்பழக்கமும் இதாலி பிரெஞ்சு பழக்கம்போல் ஸஸேமி ராதான். அதனால் நான் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு என் வண்டிக்குள் போய்விட்டேன்; ஆனால் பிரிடனுக்குப் பகைகள் ஆயிரக்கணக்காக காலி செய்யப் படும் காக்ஷியைக்கண்ணாரக் கண்டேன்; ஜெனரல் வேவல் தன் யுத்தக்கைதிகளுடன் என்னைப் பேச விடாததைக்கூட கருதாமல் என் மனதாலேயே அவரை வணங் கினேன்.

கிழக்கத்திய உபநாடகம்.

நான் என் விஷயங்களைத் தூக்குத்தூக்காய் சொல்வதைச் சற்று மன்னித்துக் கொள்ளுங்கள். அடுத்தபடி உங்களுக்குச் சொல்லவேண்டியதாய் ஞாபகம் வருவது "விரோதிகளாயிருந்தவர்களை" ப்பற்றி அல்ல; "விரோதிகளாக ஆகக்கூடியவர் கள்"—அதாவது ஜப்பானியர்களைப்பற்றி. என் வண்டியில் கூடவந்தவர் தூரத்து கிழக்கிலிருந்து வந்த ஒரு உத்தியோகஸ்தர்; கால் சராய் அணிந்திருந்த அவர் இளம் மனைவி, பிரப்பந்தொட்டிலில் கிடந்த ஒரு சிசு. அவர்கள் "ஷாங்காயி" லிருந்து இந்த நெடுந்தூரம் இவ்வாறு வந்தார்கள்; இன்னும் நெடுந்தொலை போகவேண்டியிருந்தது.

"ஜப்பானியர்களா! ஆம்; அவர்களை எனக்குத் தெரியும். தங்கள் ஊரில் தங்கள் வீடுகளில் மிக்க நல்லவர்கள்தான். அன்னிய நாடுகளில் பிறர்மேல் குதிரை ஏறிக்கொண்டிருந்தால் வேட்டை நாய்கள்தான். தொந்திரவு என்னவென்றால் அதிகாரம் ராணுவக்கும்பல் கையில் சிக்கிவிட்டது. கோனுயியும், மட்சூவோகாவும், ஜெர்மன் தூண்டுதலுக்கு அடங்கிவிட்டார்கள்; ஆயுத பலத்தைக்கொண்டு வெறி பிடித்து அலைகிறார்கள். அரைவயிறு கஞ்சிகுடித்து ராப்பகலாய் உழைக்கும்

ஜப்பானிய பாமர ஜனங்களுக்கு "நிப்பானின் மகோன்னத எதிர்காலம்," "கிழக்கே புதிய ஏற்பாடு" இவைகள் அர்த்தமற்றவை. டயட் சபையை கேட்பாரில்லை; வேலை நிறுத்தங்கள் அடக்குமுறையால் அடக்கப்படுகின்றன; ஒவ்வொரு தொழிற்சாலையிலும் பண்ணையிலும் எங்குபார்த்தாலும் ஒற்றர்கள். பணமிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, உணவு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அமெரிக்கர்களுடன் சண்டையிட நேர்ந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ராணுவ ஜெனரல்கள் தங்கள் இஷ்டப்படிதான் செய்யப் போகிறார்கள். இந்த வெறித்த குதிரையை அடக்கக்கூடியவர் அரசன்தான். ஜப்பானியர்களுக்குத் தங்கள் சக்ரவர்த்தியிடம் மிக்க ராஜவிஸ்வாஸம் உண்டு. ஆயினும், ஒவ்வொரு ஜப்பானிய பத்திரிகையும் சினிமாவும் ரேடியோவும் சக்ரவர்த்தி வெறித்த குதிரை இழுத்துச்செல்லும் வண்டியில் இருந்துகொண்டு வண்டிக்காரனுக்கு சபாஷ் கொட்டுவதாக கூறுவது சரியானால், வெகு சீக்கிரத்தில் ஜப்பானியர்கள் அமெரிக்கர்கள் மீது மோதும்படி நேரிடும். அப்பொழுதுதான் அவர்களுக்கு புத்திவரும்." என்னுடன் பேசியவருக்கு புறப்படும்பொழுது யுத்தப் பழக்கம் இல்லை, அவர் ஷாங்காயில் வியாபாரம் பெருத்த தெருவில் ஒரு மாளிகையில் இருந்தவர். தெருக்களில் சமீபத்தில் ஜப்பானியர்கள் ஜம்ப நடை நடந்து கெடுபிடிசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இதையெல்லாம் உணர்ந்து அவர் தன்னிடத்தைவிட்டு இந்தியாவில் ஒரு ஜூனியர் ராணுவ ஆபீஸர் பள்ளிக்கூடத்தில்தான் சேருவதும், தன் மனைவியையும் குழந்தையும் இந்திய மலைச் சாரலில் ஒரு சிறு குடிசையில் விட்டுவைப்பதும் விரும்பத்தக்க பரிவர்த்தனை என்று நினைக்கிறார்.

ஒரு யுத்த நகரம்.

யுத்த முயற்சிகளை வெளிப்படையாக எதிர்த்தபிறகு "ஸி" வகுப்பு சிறை தங்கள் பிறவிக்கும் தேகத்துக்கும் ஒத்த தல்லவென்று புகார் செய்பவர்களை பம்பாய்க்கு ஒருதரம் போய்விட்டு வாருங்கள் என்று சொல்வேன். அவர்கள் திருஷ்டிகோணமே மாறும். கிராமாந்தரத்திலிருந்து பட்டணம் போனமாதிரி போன எனக்கு அநேக விஷயங்கள் புதிது புதிதாகப்பட்டன. ஏனெனில், பம்பாயே அடியோடு மாறிவிட்டது; அது ஒரு யுத்த நகரமாகி விட்டது. ஒரு உதாரணம். சென்ற யுத்தத்தில்தான் எனக்கு முதன்முதலில் யுத்த பரிச்சயம். அந்த அனுபவத்தைக்கொண்டு ராணுவ உடைதரித்தவர்கள் போட்டுக்கொண்டிருக்கும் சின்னங்கள், தோள்பட்டைகளிலிருந்து அவர்கள் இன்னஇன்ன அந்தஸ்துள்ளவர்கள் என்பதைக் கண்டுபிடித்துவிடலாம் என்று நினைத்தேன். ஆனால், நான் பம்பாயில் இறங்கியிருந்த ஹோட்டலில் 13, 14 உடைகள் என்னைத் திணரவைத்தன. அந்த வீரர்கள் டிபர்ரா டெல்ப்யூகோவிலிருந்து வீரசுவர்க்கம் வரை பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம்; தூக்குப்போடுகிறவன் சித்தாள் முதல் சர்வாதிகாரிபிரபுவரை இருந்திருக்கலாம் என்று தோன்றிற்று. அங்கிருந்த இரண்டுநாளும் நான் வாயை திறக்கவில்லை, ஸினிமாவுக்கும் போகவில்லை. ஹோட்டலிலும், தெருக்களிலும் ஜாதிகள், ஆண் பெண் இருபால்கள், உடைகள், இவைகளின் விசித்திரங்களை கவனிப்பதே எனக்கு ஒரு பெரும் பொழுதுபோக்காயிற்று.

போஜனசாலையில் பல ரூபக்காக்ஷிகள்.

அந்த ஹோட்டலின் சாப்பாட்டு அறைகள், கூடும் அறைகள், தாழ்வாரங்களில் நான் இன்ன இன்ன அந்தஸ்துள்ளவர்களென்று தெளிந்து பொருமைப்படக் கூடிய அநேகர் இந்தியாவுக்காகவும், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்துக்காகவும், மனித க்ஷேமத்துக்காகவும் உழைத்து வருபவர்கள் இருந்தார்கள். அங்கு அவசரம் அவசரமாகச் செல்லும் நேர்த்தியான பிரிடிஷ் ஆபீஸர்கள்; காலாட் படை, டாங்குப்படை, கவச மோட்டார்படை, விமானப்படை, பீரங்கிப்படை இவைகளைச் சேர்ந்தவர்கள்; டாக்டர்கள், படை இறக்குகிறவர்கள், ஸிக்னல், மராமத்து ஆட்கள். அவர்கள் உடையில் சிவப்பு, ஊதா, பச்சைப்பட்டைகள் என்ன, நட்சத்திரங்கள், கிரீடங்கள் தனித்தனியாகவும், சேர்ந்தும், மாறும்வாள்கள் இவைகளை பைகளிலோ தோள்களிலோ அணிந்திருந்தார்கள். அவர்களுள் கம்பீரமும் சுறுசுறுப்புமான இந்தியர்கள் இருந்தார்கள்; சிலர் குறுகிய காக்கி சட்டைகளையும், சிலர் நீலமும், சாம்பலும் கலந்து கீழே தொங்கும் நீண்ட சட்டைகளையும், பட்டை பெல்டுகளையும் தோள்களில் மின்னும் நட்சத்திரங் களையும் அணிந்திருந்தனர். அப்பழுக்கில்லாத வெள்ளை உடை, தங்கப் பித்தான் கள், நல்ல நீலத்தோள்பட்டையில் ஜரிகை அணிந்திருந்த கடற்படை உத்தியோகஸ்தர்கள் அதில் இருந்தனர். இரண்டு மேஜைகளைச் சுற்றி இளம் பெண்கள் இருந்தனர்—தளதளத்தமேனி, ஆரோக்கியம் ததும்பும் தேகங்கள், பார்க்கத்தகுந்தவர்கள்; அழகான சாம்பல் வர்ண பாவாடைகள் தரித்தவர்கள், மேலே பட்டு ரவிக்கைகளின் கழுத்தில் கருப்பு டைகள் கட்டினவர்கள்; தலையில் விளையாட்டாக குல்லாவை ஒருபுறம் சற்று சாய்த்துவைத்தவர்கள். இதேமாதிரி ஆடைதரித்த மூன்று நான்கு வயது முதிர்ந்த ஸ்திரீகளுடனும் இரண்டு ராணுவ உடைதரித்த டாக்டர்களுடனும் சாப்பாட்டுக்குக் காலம் தவருமல் வந்து அவர்கள் சென்றார்கள். அவர்கள் ஆஸ்திரேலியா அல்லது நியூஸிலாந்திலிருந்து வந்து வேலை பழகும் நர்ஸுகள். அவர்கள் செல்லும், பெயர் சொல்ல முடியாத . . . ஊருக்குப்போகுமுன், பம்பாயில் அவர்கள் தங்கள் காருண்ய கைங்கர்யத்தின் பாக்கியுள்ளதுகளைப் பழகிக்கொண்டிருந்தார்கள். அங்கு நானுவித ராணுவ உடைகள், சின்னங்கள், கைப்பட்டைகளிருந்தன. காலனி உத்தியோகஸ்தர்கள், அயல் நாட்டு கான்ஸல்கள், போலீஸ் உத்தியோகஸ்தர்கள், புரோவெஸ்ட் உத்தி யோகஸ்தர்கள் இருந்தார்கள். சாப்பாட்டு மேஜையில் பேசின பாஷைகள் பாபெலில் பேசின பாஷைகளைப்போல எண்ணி முடியாது.

வீதியில் பல ரூபக்காக்ஷிகள்.

ஹோட்டலிலிருந்து இறங்கி சில அடிகள் செல்லுவதற்குள் வெயிலால் சற்றுக் கருத்த ஆண்தகை மக்கள் கண்ணில் பட்டனர். வெற்றுக்கால்கள், கிட்டத்தட்ட சட்டையில்லாக்கைகள்; அவர்களுடைய பெரும் அவயவங்கள் வெயிலால் கருத்து இருந்தன, முகம் வெயிலால் சிவந்து இருந்தது. இந்த ஆஸ்திரேலியப்படைகள் சாரணத்தொப்பிகள் தரித்து, இறைந்து பேசிக்கொண்டு, ஆனல், நற்குணத்துடன், பம்பாய்மாநகரின் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு திரிந்தனர்.

நான் இருந்த இடத்துக்கு சுமார் 100 கெஜங்களுக்கு அப்பால் மற்றொரு ஹோட்டல் இருந்தது. அந்த ஹோட்டலுக்கு வெளியேயும் இவர்களைப்போன்ற வேறுசில ஆண்தகை மனிதர்கள் வெற்றுக்கால்களுடனும், சட்டையில்லாக்கைகளுடனும், காக்கி உடைகளுக்குப் பதிலாக வெள்ளை உடுப்புகள் அணிந்தவர்களாய் கூடியிருந்தார்கள். இவர்கள் துறைமுகத்தில் வந்து தங்கியிருக்கும் சண்டைக் கப்பலிலிருந்து வந்திருந்த கடற்படை வேலைக்காரர்கள். கொஞ்ச தூரத்தில் இருந்து இவர்களைப் பார்த்தால், இவர்களைப்போலவே வெள்ளைக்குல்லாய்களும், இதேபோன்ற உடைகளும், ஆனால், கொஞ்சம் பழுப்பு நிறமேறிய அவயவங்களை உடைய, ராயல் இந்திய கப்பல் படையில் வேலை செய்யும் பவர்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாசமே தெரியாது. இவர்களும் சுத்தமாகவும், ஊக்கமாகவும், சந்தோஷமாகவும் தகைமை உள்ளவர்களாகவும் இருந்தார்கள். அவர்களில் புதுக்கோட்டை ஆள் ஒருவருமில்லை—ஏனோ எனக்குப்புரியவில்லை. இவ்வறிய வேலைப்படையில் நல்ல சம்பளமும், நல்ல உணவும், இச்சிறுவர்களை இந்திய கப்பற்படைக்கு இப்பொழுது ரொம்ப அவசியமான தன்னம்பிக்கையுள்ள, தன் தொழில் அபிமானமுள்ள மாலுமியாகச் செய்யக்கூடிய நல்ல பயிற்சியும், அளித்து வேலையாட்களாகவும், யந்திர வேலைக்காரர்களாகவும், குமாஸ்தாக்களாகவும், சமையல்காரர்களாகவும், எலெக்ட்ரிக் உத்தியோகஸ்தர்களாகவும், ஸிக்னலர்களாகவும், மாலுமியாகவும் சேர்த்துக்கொள்வதாய் சமீபத்தில் விளம்பரங்கள் செய்யப்பட்டதே!

ஒரு ஜெனரல் பேசுகிறார்.

மத்தியான வெயிலில் துறைமுகம் பொன்மயமாயிருந்தது. அதில் நின்ற பெரிய கப்பல்கள் அஸ்தமனகாலத்தில் அவைகளின் பக்க வாட்டில் வெளிச்சம் படும்பொழுது எவ்வளவு பயங்கரமாயிருக்குமோ அவ்வளவு பயங்கரமாயில்லை. நான் நிழல் நிறைந்த ஒரு தாழ்வாரத்தில் கிடந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தேன். அங்கு எனக்கு முன்னமேயே உட்கார்ந்திருந்த ஒரு பெருத்த சரீரமும் நரைத்த தலையும், வாயில் ஒரு குட்டை சுங்கானும் உடைய ஒருவரைக்கண்டு வந்தனம் செய்தேன். அதற்குப் பதிலில்லை. நான் மேஜை அருகில் உட்கார்ந்து ஒரு போத்தல் பீருக்கு ஆர்டர் செய்துவிட்டு எனக்கு முன்னிருந்தவரின் உடைகளைக் கவனித்தேன். அவர் தோள்பட்டையில் ஒரு ஜெனரலின் அடையாளம் இருந்தது. மார்பில் டி. எஸ். ஓ. லீஜியன் ஆப் ஆனர், அரை டஜன் பதக்கங்கள் இருந்தன. அவர் ஒரு பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார்; அதனால் அவரை உற்று நோக்க எனக்கு முடிந்தது. அவரும் என்னைப்போலவே நடுவில் "லிப்ட்" கதவு வழியாகப் புதிதாக வந்து கொண்டிருந்த பல வர்ண உடை அணிந்த ஜன சமூகத்தை நிமிர்ந்து பார்த்துக்கொண்டேயிருந்தார்.

இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் "ஒரு சினிமாவைப்போல் நன்றாய் இருக்கிறது" என்று சொல்லத்துணிந்தேன்.

"உம்".

"ஐயா, நீங்கள் காணும் உடைகளில் பாதிவரையாவது இன்னின்ன படையைச்சேர்ந்ததென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டேன். (இப்பொழுது தான் நான் அவர் தோள்பட்டையை கவனித்தது).

"அட கடவுளே! தெரியாது. அதோ அந்தக் கப்பல்களைப் பாருங்கள். உலகத்தின் எல்லா பாகத்திலிருந்தும் அவைகள் வருகின்றன. கடற்கரையில் ஒரு கலப்புக்கூட்டம் வந்து சேருகிறதென்பதில் என்ன ஆச்சரியம்?" நான் பார்த்துக்கொண்டிருந்தபொழுது ஒரு நீண்ட, தணிந்த, க்ரூய்ஸர் மெதுவாக ஹார்பருக்குள் நுழைந்து, எல்லாக்கப்பல்களையும் தாண்டி, கப்பல்கள்வரும் வழி நீள வந்து வேகமாய் திரும்பி ஹார்பரின் முகத்துவாரத்தை நோக்கி ஒதுங்கி நின்றது.

"ஓகோ! எல்லாம் படைகளைக்கொண்டு வருகின்றன என்று நினைக்கிறேன். அதோ நாலு பெரிய புகைப்போக்கிகளோடு தெரிகிறதே ஒரு கப்பல்; அது எந்தக் கப்பல். நான் அதை முன் எங்கேயோ பார்த்திருக்கிறேனே?" என்றேன்.

"அநேகமாய் அது..........டானியாவாக இருக்கலாம்! உலகத்திலேயே பெரிய கப்பல்களுக்குள் மூன்றுவதானது. இதற்குமுன் அதை சௌதாம்டனில் பார்த்தேன். கால்வாய்க்கு ரொம்பப் பெரிது; ஆனால் கேப்பை (முனையை)ச் சுற்றி வருவதற்கு எவ்வித இடைஞ்சலும் கிடையாது. ஆகையால் இந்தப்பக்கம் வந்து இருக்கிறது. அதற்கடுத்தாற்போல் நிற்கிறதே ஒரு ஆபாசம், அது ஒரு டச்சுக் கப்பல். ஆஸ்திரேலியாவிலிருந்து படைகளைக்கொண்டு வருகிறது. டச்சுக் கப்பல்களுக்குள் ரொம்பவும் பெரியது; ரொம்ப வேகமாய் செல்லக்கூடியது. ரொம்ப ஆபாசத் தோற்றம்; இல்லையா?"

ஒரு பிரயாணிக்கப்பலின் அமைப்பும் பந்தயக்கப்பலின் அமைப்பும் கலந்து இருந்த ஒரு அதிசய வடிவத்தை அந்த ஜெனரல் குறிப்பிட, நான் கவனித்தேன். பிறகு கூட்டத்தில் நான் ரயிலில் சந்தித்த ஷாங்காய் ஆளைக்கண்டேன். உடனே அந்த ஜெனரலை ஜப்பான் சம்பந்தமாய் அவர் அபிப்பிராயம் என்ன என்று கேட்டேன்.

"அவர்கள் பாதாளத்தில் தள்ளப்பட்டு விட்டார்கள் என்று தோன்றுகிறது. ஆனால், அவர்களை நான் பெரிதாக நினைக்கவில்லை."

"அவர்கள் நல்ல யுத்தப்பயிற்சி உள்ளவர்கள் அல்லவா"? என்று கேட்டேன். "பழைய சாமுராய்களின் யுத்த உற்சாகம் பேர்போனதாச்சே"?

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இதுவரை அவ்வாறு விசேஷமாக ஒன்றும் என் கண்ணில் படவில்லை." சுங்கானை அவர் கீழே வைத்துவிட்டு நான் நீட்டிய சாராய டம்ளர் ஒன்றை வாங்கிக்கொண்டார். 'அதோ அந்தப் பசல்களைப் பார்த்திரா?' என்று காப்டன் முதல் லான்ஸ்-கார்போரல் வரை இருந்த கட்டுமஸ்தான ஆஸ்திரேலியர்களின் கும்பல் ஒன்றை தலையை ஆட்டி சுட்டிக்காட்டினார். 'ஜப்பானியர்கள் இவர்கள் கையில் அகப்பட்டால் மிந்திரிப் பருப்பை கடித்து தின்பது மாதிரி துலைத்துவிடுவார்கள். ஆனால், இந்த சிறு மஞ்சள் வர்ணத்துப் பசல்கள், ஆஸிகள் (ஆஸ்திரேலியர்கள்) வழிக்குப் போகாமல் அமெரிக்கன் கடற்படை பார்த்துக்கொள்ளும்!'

அவர் எனக்கு தாகசாந்திக்கு ஒன்றும் கொண்டுவரச் சொல்லுவதாகத் தெரியவில்லை. எனக்குப் பசிக்கவேறு ஆரம்பித்தது. இருந்த போதிலும் ராணுவ உத்தியோகஸ்தர் ஒருவர் அகப்பட்டபொழுது என் தாய் நாட்டைப் பற்றிக்கேட்பது உசிதம் என்று தோன்றிற்று.

'ஹிட்லர் மனதில் பல விஷயங்கள் இருக்கிருப்பிலிருக்கே. உங்கள் ரீதியாக, அவன் நமது தேசத்தை படை எடுப்பான் என்று தோன்லுகிறதா?'

சுங்கான் அவர் கெட்டிவாய்க்குள் சென்றது, ஒரு கை எதிரேயிருந்த பத்திரிகையை அள்ளி எடுத்தது, நாற்காலி கிரிச்கிரிச் என்றது. 'அப்பன் ஆணை அவன் படையெடுத்தால் தேவலே! நல்ல காலை வந்தனம்..........' அந்தப் பெருத்த ஆசாமி தாழ்வாரத்தில் கம்பீரமாகச் சென்றார். மந்தாரத்தில் இரண்டு சிறு கப்பல்கள், ஏதோ கெட்ட எண்ணங் கொண்டதுபோல், துறை முகத்தை நோக்கி ஏதோ காரியத்தின் மீது வந்துகொண்டிருந்தன. இந்தப் பெரிய ஆசாமியும் நாசகாரிகளும் மிக்க சமாதானத்துடன் என்னை சாப்பிடச் செய்தன. அடுத்த மேஜையில் ஒரு கடல் உத்தியோகஸ்தர் இருந்தார்.

சாந்தமான கண்டனம்.

அவரைப்பார்த்து 'என்ன ஏராளமான கப்பல்கள் இருக்கின்றனவே. புறப்பட்டுக்கொண்டிருந்த அந்த இரண்டு நாசகாரிகளின் பெயர் என்ன?'

அந்த லெப்டினன்ட்-கமாண்டர் என்னை தன் நீலக்கண்ணால் உற்றுப் பார்த்து நல்ல பொய் சொல்ல ஆரம்பித்தார் 'எனக்குத் தெரியாது, ஐயா, (இது என் நரைத்த மயிரைப்பார்த்து மரியாதைக்காக, அவர் ரீதியாக நான் கவர்ன்மெண்டு சீப் செகரெடேரி முதல் குதிரைப்பந்தய கிளப் ஸ்டேவர்ட் வரை வேலையிலிருக்கலாம்) 'எனக்குத் தெரிந்தாலும் உங்களுக்குச் சொல்ல மாட்டேன்!' அப்பொழுதான் எனக்கு என் அசட்டுத்தனம் வெளியாயிற்று. பம்பாயில் யுத்த காலத்தில் ஒருவரும் கப்பல்களின் பெயர்களைக் கேட்கக்கூடாது, சொல்லுகிறதுமில்லை.

காயப்பட்டவர்.

நான் திரும்பிவருகையில்தான் என் ரயில்வண்டியில் இந்த யுத்தம் என்ன, வேறு யுத்தங்கள் என்ன, இவைகளைப்பற்றி ரொம்பப் பேச்சு நடந்தது. ரயில் கிளம்புமுன் வெள்ளைஷர்ட்டு, ஷார்ட்டுகள், சாம்பல்நிற ஸ்டாக்கிங்ஸ் தரித்த ஒருவர் தனித்து வரலாமென்று நான் எண்ணிய என் வண்டிக்கதவைத் திருப்பினார். என் சாமான்களைப்பரப்பி நானும் வண்டி என்னுது என்று முகத்தைக்காட்டி, இடத்தை அடைத்துக்கொண்டு உட்கார்ந்தேன். ஆனால் வந்தவருடன் இருந்த ஐரோப்பிய உடைதரித்திருந்த ஒரு இந்தியர், 'இந்தக் கடல் உத்தியோகஸ்தர் உங்களுடன் பூனாவரை வரலாமா? (அப்பொழுதுதான் நான் வந்தவர் தலைக் குல்லாவில் அதன் சின்னமாகிய சிவப்புப் பட்டையை கவனித்தேன்). அவர் இந்த நெருக்கடியானவண்டியில் அவசரமாக ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டியிருக்கிறது' என்று கேட்டார்.

இரண்டு நீண்ட பளுவான மூட்டைகளை இழுத்துக்கொண்டு அவர் வண்டியில் ஏறினார். ஒன்று அவர் படுக்கும் ஹாமக், மற்றொன்று, அவர் சொன்னதிலிருந்து,

(சீமையிலிருந்த அவர் பெண்சாதியைத்தவிர) அவருக்கு இருந்த எல்லா ஆஸ்திகளும் அடங்கிய மூட்டை. எனக்கு எதிர்த்த ஆசனத்தில் களைத்து உட்கார்ந்து, தலை வேர்வையைத்துடைத்து, மயக்கம்போட்டு விழுவார்போல் தோன்றிற்று. என்னிடம் கொஞ்சம் 'விஸ்கி' இருந்தது. அதில் ஒரு கோப்பை கொடுத்தேன். அதை ருசியுடன் அருந்தினர்.

'திடும் என்று தூக்கி வாரிப்போட்டதால் வந்தவினை இது' என்றார்.

'என்ன சங்கதி? உங்களை இங்கே உள்ளே திணித்த ஆள் யார்? டாக்டரா?' 'இல்லை. எங்களை ரயிலில் ஏத்திவிடுவதற்காக ஏற்பட்டிருக்கும் ஆள். ஹிருதய பரிசோதக டாக்டர் ஒருவரை நான் பூனாவில் பார்க்கவேண்டுமாம். ஹிருதயமாம் ஹிருதயம்! நன்றாயிருக்கோ இல்லையோ? எனக்கு வயசு 35-தான் ஆகிறது. என் ஹிருதயத்திலே கோளாராம்.'

'அப்படி இருந்தா இந்த பெரும் மூட்டைகளை ஏன் தூக்கி வந்தீர்? ரொம்ப கனமா இருக்கே,' என்று சற்று கடிந்து சொன்னேன்.

'இதைவிடச் சொல்ரேளா என்ன? இருந்தாலும் மூட்டைகள் சற்று கனம் தான். என் ஹிருதயமும்..............அதிர்ச்சி அவ்வாறு செய்திருக்கும்னு நினைக்கிறேன்!'

கடற்படையின் கார்போரல்.

அப்புறம்தான் அவர் விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தார்.

அவர் ராஜீய கடற்படையைச் சேர்ந்தவர். சென்ற யுத்தத்தில் 'ரெகுலர்' ஆக இருந்தவர். இந்த யுத்தத்தில் 'ரிஸர்வில்' சேர்க்கப்பட்டு, தற்பொழுது 12,000 டன் எண்ணைக்கப்பல் ஒன்றில் பீரங்கிக்காரர். அவர் செல்லாத துறைமுகமில்லை. ஜப்பானில் ஒரு பிரிடிஷ் கடற்படை உத்தியோகஸ்தருக்கு மோட்டார் டிரைவர் வேலைபார்த்தார். சைனாவில் கொள்ளைக்காரர்கள் இவரைச் சுட்டார்கள், (அவர் கால்சல்லடத்தைத் தூக்கிப் பல்லுபல்லாயிருந்த ஒரு தழும்பைக் காட்டினர்). ஜட்லண்ட் கடல் யுத்தத்தில் மாலுமிகளின் கார்போரலாக இருந்தார் (இதிலிருந்து அவர் தன் ஹிருதயக் கோளாரைப்பற்றி வருந்திய பொழுது தன் வயது 25 என்றார். அது 45 ஆக இருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன்). பிறகு ஷாங்காயில் தெரு அடைப்புகளில் தூக்கிய துப்பாக்கியுடன் 54-மணி நேரம் இங்கு அங்கு அசையாமல் நின்றார். டங்கர்க்கில் இருந்து தப்பினர். இங்கிலீஷ் கால்வாயில் கப்பல்களை 'கான்வாய்' (துணை) செய்யும் போது முன் கப்பல் பின்பாகம் ஒரு வெடிகுண்டால் அழிந்து முன்பாகம் தெரிவதையும், அதுவும் தன் கண் எதிரே ஜலத்தில் முழுகுவதையும் பிரத்தியட்சமாகப் பார்த்தார். பிறகு பார்டியாத் தாக்குதலையும், தன்னைச் சுற்றியிருக்கும் கப்பல்களிலிருந்து ஒரே காலத்தில் சுடப்பட்ட பீரங்கி குண்டுகள் அந்த துரதிர்ஷ்ட வசமான பட்டணத்தை அழிப்பதையும் பார்த்தார்.

இவ்வளவு பார்த்தவருக்கு 'அதிர்ச்சி' ஏற்படுவது சகஜம் என்றும் 'ஹிருதயம்' கோளாராகக்கூடும் என்றும் நான் ஒப்புக்கொண்டு மற்றொரு குப்பி 'விஸ்கி' கொடுத்தேன்.

"டங்கர்க்கா? கூ! அதுமாதிரி நான் கண்டதில்லே. நானும் அநேக கப்பல்கள் கண்டதுண்டு. ஆனால் டங்கர்க்கில் போல ஏககாலத்தில் அவ்வளவு விதக் கப்பல்களே நான் பார்த்ததில்லே. பெரும் யுத்தக்கப்பல்கள், யாக்டுகள், எண்ணெய்க் கப்பல்கள், டக்குகள், நாசகாரிகள், ஓடங்கள், மானீடர்கள், லேனர்கள்—எங்கிருந்து இவ்வளவும் வந்தனவோ, நான் அறியேன்.

நாங்கள் டங்கர்க்கு போனதும் கரைக்கு எவ்வளவு சமீபம் உரசாமல் போகலாமோ அவ்வளவு போனேம். சுக்கான்விட்டு, ஒரு நாசகாரிக்குப் பக்கத்தில் எங்கள் கப்பல் நின்றது. டவுனேத்தாண்டி சமுத்திரக்கரை மணல் மேடுகள்மீது ஒன்றின்பின் ஒன்ருக ஜெர்மன் டாங்கிகள் சுட்டுக்கொண்டு வந்தன. ஐந்து வருவதை இம்மாதிரி பார்த்தேன். பார்த்ததுதான் தாமதம்—நாசகாரி ஒன்று குறி நன்ருக பிடிக்கக்கூடிய தூரத்தில் நின்று டாங்குகளேப்பார்த்து சுட்டது. அடுத்த நிமிஷம் டாங்குகளேக்காணேம்; அவைகள் அழிந்துவிட்டன.

நம்ப ஆள்களே எவ்வளவு வேகமாக எடுத்துக்கப்பலில் சேர்க்க முடியுமோ அவ்வளவு வேகமாக ஏத்திஞேம். கப்பலே ஒட்டி நிறுத்த (பியர்) மரபபாலம் ஒன்றுமில்லே. மோட்டார்களே சமுத்திரத்தில் எவ்வளவு தூரம் நிறுத்த முடியுமோ அவ்வளவு தூரம் ஒட்டி வரிசை வரிசையாக நிறுத்திஞர்கள். அவைகளிலிருந்து கப்பலேப்பிடித்துக்கொண்டு ஏறிஞர்கள். கப்பலில் இனிமேல் ஒரு ஆளேக்கூட ஏற்றமுடியாது, என்றபடி நிறைந்தமேல், வெறிபிடித்த மாதிரி எங்கள் கப்பல்களே ஒடித்துத்திருப்பி இங்கிலீஷ் கால்வாய் குறுக்கே விரைந்து ஓடிஞேம். ஜெர்மன் ராக்ஷஸர்கள் உயர விமானங்களிலிருந்து அலறிப்பாய்ந்து மெஷின பீரங்கியாலும் வெடிகுண்டுகளாலும் எங்களேச்சுட்டார்கள். என் கப்பலுக்கு அடுத்த கப்பல் ஒன்றில் ஒன்று விழுந்தது. அது கல் நீரில் அமுங்குவதுபோல் உடனே அமுங்கிற்று. ஆம். ஒரு சிறிய ஓடம் கவிழ்ந்து அவர்கள் மிதக்கையில் ஒரு ஜெர்மன் விமானம் வந்து தன்பெட்ரோல் அடைப்பை திறந்து பெட்ரோலே ஜலத்தில் மிதக்கச்செய்தது. அது உயரப்பறந்து மறுபடி பாய்ந்துவந்து, பெட்ரோலில் நெருப்புக் குண்டுகளே சுட்டு பத்த வைத்தது. அந்த ஜெர்மன் அல்லவா நல்ல கனவான்! (அப்படிச்சுட்ட ஜெர்மன் இப்பொழுது புதைகுழியிலிருக்கவேண்டும். என் நண்பன் வார்த்தைகளின் த்வனியை அவன் கேட்டால் புதைகுழியிலும் அவன் நடுங்குவான்).

இதைபபோல் விந்தை உண்டோ? பிரான்ஸிலிருந்து பத்திரமாக 30,000 பிரிடிஷாரைக் காப்பாற்றிஞல் பெரிது என்று எண்ணிஞேம்—3,75,000 பேரைச் சேர்த்தோம்! அப்படிச் சேர்த்தது பெரும்பாலும் பிரிடிஷ் கப்பல்கள்தான். டச்சுக்காரரும் ஒத்தாசை செய்யவில்லேயா என்று கேட்கிறீர்? ஏன், அவர்கள் பாதி நாஸிகளாச்சே! ஒரு டச்சு மோட்டார் படகு இங்கும் அங்கும் போய்க் கொண்டிருந்தது. ஜெர்மன் விமானங்களேக்கண்டவுடனே அதற்கு இந்த வேலே பிடிக்கவில்லே. எங்கள் கப்பல் நிறம்பியவுடன், நான் என் கண்ணுலேயே டச்சுப் படகு ஒரு முழுகிய விமானத்தில் மிதக்கும் ஒரு ஆபீசரையும் மூன்று மாலுமிகளேயும் தாண்டிச்சென்றது பார்த்தேன். நின்று அவர்களேப் பொருக்கியிருக்கவேண்டும் அல்லவா? வீட்டுக்கு விட்டது சவாரி. நான் என் கப்பல் கிழவனிடம்

(காப்டனிடம்) சொன்னேன் 'இந்த ஏழைகளை நாம் காப்பாற்றத்தான்வேண்டும்' என்றேன். 'இடமில்லையே. இருந்தாலும், பீரங்கிக்காரரா! கயறு ஒன்று எறிந்து அவர்களை பின் இழுத்துச் செல்வோம்' என்றார் காப்டன். நான் எறிந்து, அவர்கள் அதை நொருங்கிய விமான உடலில் கட்டி, இம்மாதிரி பத்திரமாக இழுத்துச்சென்றோம். அந்த ஆபீசருக்குத் தொடையில் ஒரு பெரிய காயம். அதிலிருந்து பீச்சும் ரத்தத்தை நிறுத்த செத்தவன் ஷர்ட் ஒன்றை கிழித்து அவன் அடைத்தான். நின்ன இடத்திலிருந்து காயம் தெரிந்தது. போக்ஸ் டோனில் அந்த ஆபீஸர் ஒரு விமானப்படை வண்டியில் ஏறிக்கொண்டார். அவன் பிழைத்திருப்பான் என்று நினைக்கிறேன். ஏனெனில், அவன் அடிக்கடி 'எனக்கு ஒன்றுமில்லை. டோவர் வெள்ளைச்சாக்குப்பாரைகளைப் பார்த்தால் போதும்' என்று உறக்கச்சொல்லிக்கொண்டு வந்தான்.

சமுத்திரத்தில் விழுந்தவர்களைப் பொருக்குவதில்தான் என்ன வித்தியாசம்: நாம் என்ன செய்கிறோம்? நாம் ஒரு ஜெர்மன் கப்பலை நிறுத்துகிறோம் என்று வைத்துக்கொள்வோம். நாம் கொடியாட்டி சமிக்ஞை செய்கிறோம். 'உங்கள் கப்பலிலிருக்கும் ஆட்களை ஓடத்தில் ஏற்றுங்கள். எங்கள் கப்பலுக்கு அனுப்புங்கள். அவர்களுக்கு வசதியான இடம் கொடுத்து சாப்பாடும் போடுகிறோம். இதற்கு 20 நிமிஷங்கள் அளிக்கிறோம்'. ஜெர்மன் ஆகாயக்கப்பல் என்ன செய்கிறான்? ஒரு எச்சரிக்கையும் கிடையாது. முழுக அடிக்கிறான்'. என் மாலுமி நண்பன் ஒரு நிமிஷம் யோசித்தான். 'ஆம், ஆம். நானுயிருந்தால் இனி மேல் ஜெர்மானியர்களை எப்படிப் பொருக்குவேன் தெரியுமா? ஒரு மெஷின் பீரங்கி நுனியில்.

'ஆம், டச்சுக்காரரையும் பெல்ஜியர்களையும் அமுக்கியது ஐந்தாம் படைதான், அதைச் சொல்லுவானேன்? நம்ப ஊரிலும் அக்காலத்தில் சிலர் ஐந்தாம் படை ஆள்கள் இருந்தார்கள். இதற்கு ஒன்று இரண்டு மாதங்களுக்குமுன் எங்களை...... துறைமுகத்தில் கப்பலில் சேரும்படி உத்தரவு வந்தது. கப்பலுக்குப்போகும் முன் கரையில் நாங்கள் நின்று கொண்டிருந்தோம். கடல் ஆபீசர் உடைதரித்த ஒரு பயல் வந்தான். 'என்னடா பண்ணிக்கொண்டிருக்கேள் இங்கே? உங்கள் எல்லோரையும் ராச்சஸ்டிரிலோ, வேறு எங்கோ வந்து சேரும்படி உத்தரவு கிடைத்திருக்கிறது. உங்கள் கப்பல் புறப்படுவது ரத்தாகி விட்டது. சீக்கிரம் திரும்பிச் செல்லுங்கள்.'

'ஆனால் நாங்கள் எங்கள் காப்டனுக்காகக் காத்திருக்கிறோம். அரை மணியில் கப்பல் ஏற வேண்டுமே.'

'வாயாடாதே, இதோ ஸ்டாப் உத்தரவு'........எனக்கு அடுத்தாப்போல் என்நண்பன் நாபி என்பவன் 'இதோ மிஸ்டர்.........இருக்கிறார். அவரைக்கேட்கிறேன்' என்றவுடன் சிவப்புப்பட்டைப் பயல் நகர ஆரம்பித்தான். நாபி எங்கள் ஆபீசருடன் பேசினான். 'ஸ்டாப்' உத்தியோகஸ்தன் என்று சொல்லிக்கொண்ட பயலை விறட்டி நாபி ஓடினான். நாங்கள் படகு ஏறும்பொழுது நாபி 10-நிமிஷம் கழித்து திரும்பிவந்தான்.

எங்கள் ஆபீஸர், 'என்ன பண்ணினே'? என்று கேட்டார். 'அந்தப்பயல் ஊார்க்கமாட்டான் போல் இருந்தது' என்றான் நாபி.

'அப்படின நீ என்னசெய்தாய்?'

'ஓடும்பொழுது முதுகில் சுட்டேன்'.

'பல்பயல் நீ, ஓடத்தில் ஏறு'.........நாங்கள் கப்பல் ஏறினோம்.

இம்மாதிரி பல விஷயங்களைப்பற்றி பேசினோம். மனிதர்கள்; சண்டைகள்; ஹாஸ்ய சம்பவங்கள்; துக்க சம்பவங்கள்; புதிதாக கட்டிய கப்பல்களில் பீரங்கிகளை வார்க்கும் விக்கர்ஸ் ஆர்ம்ஸ்ட்ராங்கு கம்பெனியார் அமைத்திருக்கும் புதிய பீரங்கிகள்—முன்யுத்தத்தில்விட பதின்மடங்கு வேகமாகச் சுடக்கூடியவை; நமது கடற்படைக்குத் தயாராயிருக்கும் அல்லது கிட்டதட்ட தயாராயிருக்கும் 8 புதுபெரிய யுத்தக்கப்பல்களின் பெயர்கள்; இதாலியர்களின் பிரயோஜனமின்மை; எல்லா ஜெர்மானியர்களின் ஆபாசம்; இவ்வாறு பேசிக்கொண்டே பூனை வந்து சேர்ந்தோம்.

ஒரு ராணுவ ஆம்புலன்ஸ் படையாரிடம் என் கடல் நண்பனை ஒப்பித்தேன்; 'எனக்கு உடம்பு இப்பொழுது ரொம்பத் தேவலே, அதற்கு உங்களுக்கு வந்தனம்' என்றார். 'டாக்டர்கள் சந்தேகிக்கிறபடி என் ஹிருதயம் கோளாறில்லை என்று எண்ணுகிறேன். இருந்தபோதிலும் 6 மாத ஓய்வு ஒன்றும் கெடுதல் செய்யாது. நானும் என்கடமையை கொஞ்சம் செய்திருக்கிறேன்'.

அவர் தன் கடமையை நன்றாகச் செய்யத்தான் செய்திருக்கிறார்.

வார யுத்தச் செய்திகள்.

(27—2—41 லிருந்து 5—3—41 வரை).

ராஜ்ஜிய தந்திரம்.

இரண்டு வாரங்களுக்கு முன் பயமுறுத்தல், சென்ற வாரம் வாய்ச்சண்டை, இந்த வாரம் ராஜ்ஜிய தந்திரம், அதாவது சூழ்ச்சிகளைச் செய்து, ஏமாற்றி லஞ்சம் கொடுத்து, சைனியங்களைப் பக்கத்தில் நிறுத்திக்கொண்டு வசீகரிப்பது. இக்காரியங்கள் இந்த வாரத்தில் பால்கன் நாடுகளிலும், தூரக்-கிழக்குப் பிரதேசத்திலும் நடந்தன.

பல்கேரியாவின் கதி.

இந்த வாரத்தில் இப்பேற்பட்ட விபத்தில் அகப்பட்டுக்கொண்டது முக்கியமாக பல்கேரியாவாகும். பல்கேரியாவுக்குக் கேடு வரப்போகிறதென்று மிஸ்டர் சர்ச்சில் முன்னதாகவே சொன்னது உண்மையாய்ப்போயிற்று. அதே மாதிரி, பிரிடிஷ் ஸ்தானிகராகிய மிஸ்டர் ஜார்ஜ் ரெண்டலும் பிப்ரவரி 27-ம் தேதியன்று

பல்கேரியா பிரிடனுடைய நேயத்தை இழந்து விடப்போவதாயும், தான் விலகிக் கொண்டவுடன் பல்கேரியா ரணகளமாய் விடலாமென்றும், பிறகு ஜெர்மனிக்குப் பயந்து விட்டதாகச் சாக்குச் சொல்லக்கூடாதென்றும் எச்சரிக்கை செய்தார்.

ஆனால் ஜெர்மன் பிரசாரமும், சூழ்ச்சியும், பல்கேரியாவின் கோழைத்தனமும், துரோகமும், பல்கேரியாவைக் கவிழ்த்துவிட்டன. மார்ச்சு முதல் தேதியன்று ஆகாய மார்க்கமாய் வியன்னாவுக்குச் சென்று ஜெர்மன், இதாலிய, ஜப்பானிய அயல் நாட்டு மந்திரிகளுக்கு முன்னிலையில் மூவரசு-ஒப்பந்தத்தில் பல்கேரியாவின் மந்திரி கையொப்பமிட்டு விட்டார். ஹிட்லரும் அங்கு வந்தாராம்.

மறு நாளே—பால்கன் நாடுகளின் அமைதிக்கென்று சிறிது காலம் ஜெர்மன் துருப்புகளை பல்கேரியாவுக்குள் பிரவேசிக்க அனுமதி கேட்டதாகவும், பல்கேரியா சம்மதித்ததாகவும் பாசாங்கு செய்து விட்டு, ஜெர்மன் துருப்புகள் நுழைந்து விட்டன. பிரிடன் யுத்தத்தை பால்கனில் பரவச் செய்யாதிருக்க இப்படிச் செய்ததாகவும் சொல்லிக் கொள்ளப்பட்டது.

உள்ளபடி மூவரசு-ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவதற்கு முன்னமேயே டான்யூப் நதியை சைனியங்கள் தாண்டி விட்டனவாம். வார்னா துறை முகத்தைக் கைவசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இரவில் விளக்குகளை மறைக்க உத்தரவு பிறந்திருக்கிறது. லிஸ்ட் என்பவர் சேனாதிபதி ஸ்தானத்தை வகிக்கிறார். ஆனால், 20 ஜெர்மன் படைகள் பிரவேசித்து விட்டதாகப் பிறந்திருக்கும் வதந்தி நம்பத்தக்கதில்லை. உள்ளே வர மூன்று ரஸ்தாக்கள்தானிருக்கின்றன.

மார்ச்சு 3-ல் ஜெர்மன் சிப்பாய்கள் பல்கேரியாவின் தலைநகரில் குழுமிக் கொண்டிருக்கும்போது பல்கேரியர்கள்—ஸ்வதந்திர நாளைக் கொண்டாடுகிறார்களாம்! இதுவும் ஒரு விந்தைதான்.

ஜாதியிலும், பாஷையிலும், ருஷ்யாவானது பல்கேரியாவுக்கு நெருங்கியது. வழக்கம் போலப் புரியாத வண்ணம், தனக்கு இந்த உடன்படிக்கை சம்பந்தமில்லையென்றும், பால்கனில் போரைத் தடுக்க இந்த ஒப்பந்தத்தால் முடியாதென்றும், சண்டை வந்தால் தன்னால் பல்கேரியாவுக்கு உதவி கிடைக்காதென்றும் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறது.

லண்டனிலிருக்கும் பல்கேரியா ஸ்தானிகர், மனம் கசந்து வேலையை ராஜினாமாச் செய்து விட்டார்.

பல்கேரியா ஜெர்மனியோடு சேர்ந்ததிலிருந்து பிரமாதமாய் ஒன்றுமாய்விடப் போகிறதில்லை: வெற்றியையும் தடுக்க முடியாது. ஆனால் இதிலிருந்து பிரிடன் பால்கனுக்குள் தாராளமாய் நுழைந்து, ருமேனியாவிலிருக்கும் எண்ணெய் நிலயங்களைத் தாக்க வசதியேற்பட்டுவிட்டது.

இனி, கிரீஸ், யுகோஸ்லாவியா, துருக்கி ஸமஸ்தானங்களில் ஜெர்மனி வம்பு செய்யலாம்.

கிரீஸுக்கும் இதாலிக்கும் ஜெர்மனி மத்தியஸ்தம் பேசுவதாயும், கிரீஸுக்கு ஆல்பேனியாவில் அது பிடித்த பாகத்தைக்கொடுத்துவிட்டு, அதற்கு பதிலாக, யுத்தம் முடியும் வரையில் சில கிரேக்கிய நிலயங்களை ஜெர்மனிக்கு இரவல் கொடுக்கச் சொல்லுவதாயும் ஏற்கனவே வதந்திகள் கிளம்பியிருக்கின்றன. இப்படிச் செய்யாவிட்டால் கிரீஸுக்குச் சொந்தமான திரேஸையும், மாஸிடோனியாவையும் எதிர்க்குமாம். கிரீஸ் ஒரே சமயத்தில் இதாலியையும் ஜெர்மனியையும் எதிர்க்க முடியாததலால், அல்பேனியாவில் சண்டையை நிறுத்திக் கொள்ளவேண்டும்: பிரிடனும் உதவவேண்டும். வட ஆபிரிக்காவில் யுத்தம் ஒருவிதமாக முடிந்து கொண்டிருப்பதால் அங்கேயிருக்கும் மகத்தான பிரிடிஷ் சைனியம் கிரீஸுக்கு வரலாம்.

இந்த யோசனைகளை எல்லாம் கிரீஸோடு பிரிடன் ஏற்கனவே கலந்து பேசியிருக்கவேண்டும். இதற்காகத்தான் கிரீஸுக்கு மிஸ்டர் ஈடனும், ஜெனரல் ஸ்ர்ஜான் டில்லும் இப்பொழுது வந்திருக்கவேண்டும்.

யுகோஸ்லாவியாவின் அபாய நிலை.

ஏட்ரியாடிக் கடலில் ஒரு ஊரை லஞ்சமாகக் கொடுத்து, துருப்புக்களை எல்லையில் நிறுத்திக்கொண்டு யுகோஸ்லாவியாவை பலவந்தப்படுத்துவதாகவும் வதந்திகள் வருகின்றன. இதற்காகவே ஹங்கேரியோடு ஒரு அனுக்கிரம ஒப்பந்தம் செய்யபட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஜெர்மனியும் கிரிஸுக்குள் படையெடுக்கும்போது யுகோஸ்லாவியா வம்புசெய்யக்கூடாதென்று கவலைப் படுகிறது. யுகோஸ்லாவியாவுக்கு தீர சைனியமும் ஸ்வதந்திர மனப் பான்மையுமுண்டு; ஆனால் இப்பொழுது ஜெர்மனியால் வளைக்கப்பட்டிருக்கிறது. ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்; இல்லாவிடில் கவிழ்ந்துவிடும்.

துருக்கியின் விசுவாசம்.—ஒரு பக்கம் பிரிடனிடத்தில் சிநேகமும், மற்றொரு பக்கம் பல்கேரியாவுக்குக் கொடுத்திருக்கும் வாக்கும், பல்கேரியா மோசம் செய்த இந்த சமயத்தில், துருக்கியை சங்கடப்படுத்தக் கூடியதுதான். ஆனால், மனங்கலங்காது, பிரிடனிடத்திலிருக்கும் விசுவாசத்தை மறுமுறையும் பகிரங்கப் படுத்திவிட்டது. ஏற்கனவே, பிரிடிஷ் ஸ்தானிகரும், பிரிடிஷ் ராணுவ கோஷ்டியும் தக்க யோசனைகளைச் செய்திருப்பார்கள். மிஸ்டர் ஈடனும், ஸர்ஜான் டில்லும் இப்பொழுது சென்று அவைகளை ஊர்ஜிதப்படுத்தியிருப்பார்கள். இவர்களைத் துருக்கியில் வெகு சந்தோஷத்தோடு வரவேற்றுத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்.

துருக்கியானது வெகு ஜாக்கிரதையாயிருக்கிறது: அதற்கு அபாயமேற்பட்டால் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளத் தயாராயிருக்கிறது.

மிஸ்டர் ஈடன் வந்துபோனதிலிருந்து அரண்டுபோய் விமானம் வழியாக ஒரு நேய நிருபத்தை ஹிட்லர், துருக்கியின் தலைவருக்கு அவஸரமாய் அனுப்பியிருக்கிறார். இதை மந்திரி சபையில் துருக்கி கவனித்தது.

டார்டனல்ஸ், பாஸ்பரஸ் ஜலசந்திகள் வழியாக, தன்னுடைய உத்தரவின்றி எந்தக் கப்பல்களும் போகக்கூடாதென்று மான்டிரியோ ஒப்பந்தத்தின் கீழ் துருக்கி உத்தரவு போட்டு, கடற் கண்ணிகளையும் பாவியிருக்கிறது.

தூரக்-கிழக்கு நாடுகளில், ராஜ தந்திரம்.—குரங்கைப்போல், ஜெர்மனி ஐரோப்பாவில் செய்வதை, ஜப்பான் ஆசியாவில் செய்கிறது. பிரிடனும், அமெரிக்காவும் தான் செய்யும் மத்தியஸ்தத்தைக் கலைப்பதாகச் சொல்லிக்கொண்டு, துருப்புகளை நிறுத்தி, தாய்லாண்டோடு தானும் சேர்ந்து எதிர்க்கப்போவதாக பயமுறுத்தி பிரான்ஸை ஒருவாறு இந்து-சைனு விஷயத்தில் சம்மதிக்கச் செய்திருக்கிறது. பிரான்ஸ் சற்று தாமதிக்க இறுதிக் கடிதமனுப்பி, ஹிட்லரைக்கொண்டு பயமுறுத்தச் சொல்லி, இந்து-சைனுவில் ஜப்பானை எதிர்க்கப்போதுமான சைனியங்களில்லையென்று பயப்படச் செய்துவிட்டது. வரும் வெள்ளிக்கிழமையோடு சமாதனமாய் விடலாம்.

ருஷ்யாவுக்கும், ஜப்பானுக்கும் பொதுவான மஞ்சூரியா எல்லையை, ருஷ்யாவுக்கநுகூலமாகத் திருத்தவும், ஸகேலினில் ஜப்பான் வியாபாரத்தைப்பற்றியும், ருஷ்யாவுக்குச் சொந்தமான கடலில் ஜப்பானுக்கு மீன் பிடிக்கும் உரிமைகளை தீர்த்துக்கொள்ளவும் உடன் படிக்கை செய்துகொள்ள மாத்ஸூவோகா மாஸ்கோவுக்குப் போகப்போகிறாராம்.

ஆபிரிக்காவில் யுத்தம்.

(*a*) **லிபியா—கூப்ராவின் சரணுகதி.**—பிப்ரவரி 7-ம் தேதியிலிருந்து ப்ரீ-பிரெஞ்சு, காமரூன்ஸ் படைகளால் முற்றுகையிடப்பட்ட கூப்ரா-ஸ்தலம் புதன்கிழமையன்று சரணுகதியடைந்தது. அவமானம் வெளிவந்து விடுமென்று பயந்து இதாலியர்கள் இதை மறைக்கிறார்கள். கூப்ராவிலிருந்தும், ஜரபூப்பிலிருந்தும் தான் இதாலியர்கள் எதிர்க்கக்கூடியது. இந்த இரண்டு இடங்களும் இப்பொழுது கைவசமாய் விட்டன.

பெங்காஸியைப் பிடித்து இந்த மூன்று வாரங்களாக பிரிடிஷ் சைனியம், 500 மைல் படையெடுத்த சிரமத்தையாற்றிக்கொண்டு, தளவாடங்கள் ரிபேர் செய்து, சேகரித்துக்கொண்டிருக்கிறது. எல் அகீலாவுக்கு மேற்கே ஒரு சமயம் ஜெர்மனிக்குச் சொந்தமென்று தோன்றிய ஒரு யந்திரப் படையைக் கண்டு விரட்டிற்று. சியாநேவின் இதாலியப் பத்திரிகைப்படி, ஜெர்மன் சைனியம் ஒன்று லிபியாவுக்கு வந்திருக்கிறதாம். ஆனால் இதை லண்டனில் நம்பவில்லை.

(*b*) **எரிட்ரியா—நாக்பா, கெலாமெட் பிடிப்பட்டன.**—இந்த இரண்டு இடங்களும் கெரானுக்கு வடக்கேயிருக்கின்றன. இவைகளும், ஒரு முக்கியமான மலைப்பாதையும் பிடிக்கப்பட்டன. கெரான் மலைச்சிகரங்களுக்கு நடுவே அமைக்கப்பட்டு இதாலிய பீரங்கிகளால் காக்கப்படுகிறது. அதைச்சுற்றிய மற்றச் சிகரங்களில் பிரிடிஷ் பீரங்கிகள் வைக்கப்பட்டு, அடிக்கடி மரங்களின், பாறைகளின் மறைவில் இடம் மாற்றப்பட்டு எதிர்க்கின்றன.

இதாலிய-ஸோமாலிலாண்ட்.—இங்கே பார்டீரா, வில்லேஜியே டியுசா டெக்லி அப்ருஸ், இஷா பெய்டோவா, புபூலோ பர்டி என்ற நாலு இடங்கள் கைவசப்பட்டன. முதலாவது இடம் ஒரு ராஜதானி, இரண்டாவது ஒரு சரியாய் அமைக்கப்பட்ட (மாடல்) கிராமம்; பாக்கி இரண்டு இடங்களும் மொகாடிஷூவுக்கு 170 மைல் வடமேற்கிலும், வடக்கிலுமுள்ளவை. இதிலிருந்து ஜூபா நதிக்கும், லாட்பிஸிபேயிக்கும் மத்தியிலுள்ள, இங்கிலாந்து, வேல்ஸுக்குச் சரியான விஸ்தீர்ணமுள்ள பிராந்தியம் ஒன்று பிரிடன் கைவசமாயிருக்கிறது. இதிலிருந்து அபிஸீனியாவும் வளைக்கப்படுகிறது. 16,000 இதாலியர்கள் கிழக்கு ஆபிரிக்காவில் கைதியாயிருக்கிறார்கள்.

அபிஸீனியா.—கொஜ்ஜப்பிராந்தியத்தில் பூர்யேயில் அதிக நஷ்டத்தை தேசாபிமானத் துருப்புகள் விளைவித்திருக்கின்றன. இதாலியர்கள் ஆண்டுவந்த ஸோமாலிலாண்டிலும், எதியோபாவிலும் இனி பிரிடிஷ் அதிகாரமென்று லெப்டினன்ட்-ஜெனரல் கன்னிங்காம் விளம்பரம் செய்து விட்டார்.

அல்பேனியாவில் யுத்தம்—லாரிஸ்ஸாவில் பூகம்பம்.

பிப்ரவரி 28-ம் தேதி 27 இதாலிய விமானங்களை பிரிடிஷ் விமானப்படை சுட்டுத்தள்ளின.

மார்ச்சு முதல் தேதியன்று பூகம்பமேற்பட்டு, வீடில்லாது 24,000 ஜனங்கள் லாரிஸ்ஸாவில் தவித்தார்கள். அப்பொழுது இருமுறை தவிக்கும் ஆண், பெண் குழந்தைகளை இதாலிய விமானங்கள் தாக்கின. முடிவில் சுட்டுத் தள்ளப்பட்டன. பிரெவ்ஸாவில் கைது செய்யப்பட்டிருக்கும் இதாலியர்களைப் பார்த்து இதாலிய விமானங்கள் எதிர்த்தனவாம். முன்னணியிலிருக்கும் சிப்பாய்கள் பின்வாங்காதிருக்கப் பின் அணியிலிருப்பவர்கள் அவர்களைப் பார்த்துச் சுட்டார்களாம்.

பனி மழை யதிகமாயிருக்கிறது. இந்த சமயத்தில் இதாலியர்கள் சைனியத்தை பலப்படுத்திக்கொள்ளப் பார்க்கிறார்கள். போர்முனையின் நடு பாகத்தில் இதாலியர்களின் எதிர்ப்பெல்லாம் அடக்கப்பட்டது.

கடல்யுத்தம்.—வெடி, டார்பிடோ, கடற் கண்ணிகளால் விபத்து வராமல் பத்திரமாய் அட்லாண்டிக்கைத் துணைகொண்டு கடந்து ஆயிரக்கணக்கான கனடியர்கள் பிரிடன் வந்து சேர்ந்தார்கள்; இதுவே பிரிடிஷ் கப்பல் படையின் பலத்துக்கொரு அத்தாக்ஷியாகும்.

2. நார்விக் பியர்டுக் கப்பாலுள்ள லொபோடென் தீவுகள் பிரிடனால் 4-ம் தேதி எதிர்க்கப்பட்டன.

3. டோடிகனீஸில் ஒன்றாகிய, துருக்கிக்கு இரண்டு-மைலுக்கப்பாலுள்ள காஸ்டெலோரிஸோ தீவு பிரிடனால் பிடிக்கப்பட்டு, அதில் ஆகவேண்டிய காரியங்கள் முடிந்தவுடன், விட்டு விடப்பட்டது.

4. இதாலியோ, ஜெர்மனியோ, இன்ஷியூர் செய்த கப்பல்களுக்குப் பிரிடனும், அமெரிக்காவும் கப்பற்-சீட்டுக் கொடுக்காது மறுத்து, 100-க்கு 98-க் கப்பல்கள் தடைபட்டு, ஜெர்மன் முற்றுகை பலப்படுத்தப்படும்.

5. டாங்கியரில் கோட்டை கட்டவில்லையென்றும், பிரிடனுக்குள்ள வியாபார உரிமைகளையும், ஸ்தாபனங்களையும் கெடுப்பதில்லையென்றும், ஸ்பெயின் அரசாங்கம் உறுதி சொல்லியிருக்கிறது.

ஆகாயப்போர்.—வழக்கம்போல் பகல் காலத்திலும், திரண்ட விமானங்களைக் கொண்டு, துறைமுகங்கள், கொலோன், வில்ஹெல்ம்ஸ்ஷேவன், எம்டன், லீஸ்ட் முதலிய விடங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. ஜெர்மனி, புதுமாதிரியாக லண்டனையும், உள்நாட்டு நகரங்களையும் தாக்காது, கடற்கரைப் பட்டணங்களைத் தாக்க ஆரம்பித்திருக்கிறது.

இதாலி கிரேஸியானி கைதியா ?

லிபியாவில் இதாலிய தளகர்த்தராயிருந்த மார்ஷல் கிரேஸியானி இப்பொழுது ரோமாபுரியில் கைது செய்யப்பட்டிருக்கிறதாகக் கேள்வி. சென்ற ஜூன் மாதத்திலேயே இவர் ராஜிநாமா செய்து, பிறகு முஸோலினியின் உத்தரவின் பேரில், வாபஸ் வாங்கிக்கொண்டார். பிறகு எகிப்தைப் படையெடுப்பது சாத்யமில்லையென்றும், இதாலிய சைனியங்கள் வளைக்கப்பட்டுவிடுமென்று சொல்லியும், இந்தக் கற்பனை முஸோலினியுடையதாதலால் இவர் பேச்சு ஏறுமல் போய்விட்டது. இப்பொழுது அவர் ரோமாபுரிக்குத் திரும்பிவந்து, பாஸிஸ்ட் கக்ஷியில் இருந்து விலகிக்கொண்டதின்பேரில் இந்த நகரத்தை விட்டு அகலக்கூடாதென்று உத்தரவு பிறந்திருக்கிறதாம்.

ருமேனியா.—மொத்தம் 80,00,000 டாலர் பொருமான வியாபாரத்தைச் செய்ய, நாப்தா முதலிய பூ சத்துக்களை ருஷ்யாவுக்கு விற்று, பதிலாக, ருஷ்யாவிடமிருந்து பருத்தியும், மாங்கனீஸூம் ருமேனியா வாங்கிக் கொள்ளுமாம்.

நாஸிகளைப்போல, ருமேனிய மந்திரியும் தன்னுடைய பலத்தைக் கணக்கிட சர்வஜன அபிப்பிராயத்தைத் தெறிந்து கொள்ள ஞாயற்றுக்கிழமையன்று வோட்டுகள் எடுக்கச் செய்தார். இவருடைய சைனியமும், ஜெர்மனியினுடைய சைனியமும் பயமுறுத்திக் கொண்டிருப்பதால் முடிவு இவர் பக்ஷமாய்தானிருக்கவேண்டும். இவருக்குச் சாதகமாக 20,18,000 வோட்டுக்களும், பாதகமாக 2,588 வோட்டுகளும் போடப்பட்டிருக்கின்றனவாம்.

ஜெர்மானியர் செய்யும் அக்கிரமங்கள்.

ஒரு போல்தேசத்து வாலிபயூதன் சென்ற வருஷத்தில் பிடிக்கப்பட்டு தப்பியோடிவிட்டான். இவனுக்கு ஜாமீனாக 300 யூதர்களை ஜெயிலில் போட்டு, இப்பொழுது, ஓடினவன் திரும்பி வரவில்லை யென்ற சாக்கை வைத்துக்கொண்டு, இவர்களில் 100 பேர்களைக் கொன்று விட்டார்கள்.

2. ஹாலண்டில் 2,00,000 யூதர்கள் வசிக்கிறார்கள். அவர்களை போலண்டுக்கு அனுப்பி காபந்தில் வைக்கப்படுகிறார்கள். ஆம்ஸ்டர்டாமிலும் இவர்களுக்கு பிரத்தியேகமாக ஒரு சேரி கட்டப்படுகிறது.

ஹாலண்டிலிருக்கும் ரேடியோ நிலயங்களை ஜெர்மானியர் கைவசப்படுத்தி இருக்கிறார்கள், ஸர்வகலாசாலைகள் மூடப்பட்டிருக்கின்றன: பள்ளிப் பிள்ளைகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பத்திரிகைகளிலும், சினிமாக்களிலும் பொய் வலுத்துவிட்டதால் பிரான்ஸில் இவைகளுக்கு மதிப்பு இறங்கிவிட்டது; ஜெர்மானியரோடு பேச்சு வார்த்தைகளை நிறுத்திக்கொண்டு, பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய அருவருப்பை வெளிப்படுத்துகிறார்கள்.

பிரிடிஷார்களுக்கும் தேசாபிமானம்.

பிரபுக்கள் சபை அங்கத்தினரில் 166 பேர்களும், காமன்ஸ் சபை அங்கத்தினரில் 116 பேர்களும் ராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்கள்: கப்பற்படையில் 31 பேர்; விமானப்படையில் 26 பேர், நிலப்படையில் 225 பேர்.

உணவு மந்திரி கேட்டுக்கொண்டதிலிருந்து சைனிய அதிகாரிகள் இறைச்சி, சர்க்கரை, தேயிலை திட்டங்களைக் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

விமானப் போரில், ஏற்படும் நஷ்டத்தை பிரிடிஷ் கவர்ன்மெண்டு ஈடு செய்யப்போகிறது. இதற்கு ஒரு இன்ஷியூரன்ஸும், ஏழைகளுக்கும் தக்கபடி அமைக்கப்படும்.

ஏற்கனவே, ஹாலிபாக்ஸ் பிரபுவை வாஷிங்டனில் ரூஸ்வெல்ட் நேரே சென்று வரவேற்றபடி, இப்பொழுது நமது சக்ரவர்த்தி மன்னர்பிரான் ஒரு ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று அமெரிக்க ஸ்தானீகரான மிஸ்டர் வைனென்டை நேரே வரவேற்றார். பிரிடிஷ் சரித்திரத்தில் இது முதல்தடவை.

அமெரிக்காவின் உதவி.—அமெரிக்கா பிரிடனுக்குக் கடலில் கொடுக்கும் உதவியைப் பற்றி பலவாறான அபிப்பிராயங்களிருக்கின்றன. துணைக்கப்பல்கள் அனுப்பப்போவதாக **நியூயார்க் டைம்ஸ்** பத்திரிகை சொல்லுகிறது. கப்பற்படைத் தலைவர் நாசகாரிகளை, மேலும் கொடுத்துதவமுடியாதென்கிறாராம்: வியாபாரக் கப்பல்களிலாகாவில் கொடுப்பதற்குக் கப்பல்களில்லை என்கிறார்களாம்.

பிரிடனுக்கு உதவி செய்யும் மசோதாவை எதிர்க்கும் கக்ஷியில், உதவிக்குப் பதிலாக 20,000 லக்ஷம் டாலர் கடனாகக்கொடுத்துவிட்டு, மற்ற உதவியை நிராகரிக்க மற்றொரு மசோதாவைக் கொண்டுவரப்பார்க்கிறார்கள்.

இந்திய-கவர்ன்மெண்டு வரவு-செலவுதிட்ட க்கணக்கு மத்திய சபையில் நிதி-மந்திரி ஸர் ஜெரிமி ரெய்ஸ்மனால் சமர்ப்பிக்கப்பட்டது. இந்திய பாதுகாப்புக்காக 24 கோடி ரூபாய் இந்த வருஷத்திலும், அதோடு, மேலும் 35 கோடி அடுத்த வருஷத்திலும் ஒதுக்கிவைக்கப்படும். அதிக-லாப-வரியானது, 100-க்கு $66\frac{2}{3}$ வீதமும், வரும்படி, முதலியவைகளுக்குப் போட்டிருக்கும் உயர் வரியானது 100-க்கு $33\frac{1}{3}$-வீதமும் உயர்த்தப்படும். பவுன் கணக்கில் வெளியேயிருந்த

இந்திய கடன்களை உள்நாட்டுக் கடன்களாக மாற்றியதிலிருந்து இந்தக் கடனில் 120 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. அநேக யுத்த தளவாடங்கள் இந்தியாவிலேயே செய்யப்படுவதால் கைத்தொழில்கள் அபிவிருத்தியாய்க்கொண்டு இருக்கின்றன.

தேதி.	பிரிடிஷ், விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.

24—2—41. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

	கப்பல் துறைகள், ஹார்பரில் நின்று கொண்டிருக்கும் "ஹிப்பர்" (Hipper) வர்கத்தைச் சேர்ந்த ஒரு ஜெர்மன் யுத்தக்கப்பல்—ப்ரஸ்ட் (Brest).	......	பலத்த சேதம். யுத்தக்கப்பல் குண்டால் தாக்குண்டது.

அல்பேனியா (Albania).

	இதாலிய சைனியங்கள் தங்குமிடங்கள்.—டெபெலேனி (Tepeleni)—வலோனு (Valona) ரஸ்தா.	......	பல விமானங்கள், நாசமாயின. 4 விமானங்கள்.
	மோட்டார் வண்டிகள்.—க்ளிஸுரா (Klissura)க் கருகில் ஒரு ரஸ்தா.	......	......
	துருப்புகள் ஏற்றிச்செல்லும் வண்டிகள்.—டுகோஜ் (Dukaj).	......	பலமாக தாக்கப்பட்டன.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

	விமான நிலயம்.—அபிஸீனியா (Abyssinia) வின் தலை நகரமான அட்டிஸ் அபாபா (Addis Ababa).	......	பலத்த சேதம்.
	எண்ணெய்த் தொட்டிகள்.—எரிட்ரியா (Eritrea)வி லுள்ள நெபாஸிட் (Nefasit).	......	தீக்கிரையாகின.

25—2—41. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

	பகலில்.—படையெடுத்தல்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), பிரெஞ்சுக் கடற்கரை (French coast).	......	3 விமானங்கள். ஒன்று சேதமாயிற்று.

தேதி. பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்;	எதிரிகளின் விமான படையெடுப்புகளால் நஷ்டம், விளைந்த சேதமும்.
25—2—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.		
ஸப்மரைன் (Sub-marine) சேர்க்கப்படும் இடங்கள், அவைகளை ரிபேர் செய்யுமிடங்கள்.—ப்ளஷிங் (Flushing).	......	......
இரவில்.—தொழிற்சாலைகள்—ரூர் (Ruhr).	......	சேதமாயின.
விமான நிலயங்கள்.—விரோதி ஆக்ரமிப்பிலிருக்கும் பிரான்ஸ் (France).	......	......
படையெடுக்க உபயோகப்படும் துறைமுகங்கள்.—புலாயின் (Boulogne), டன்கர்க் (Dunkirk), கலே (Calais).	11 விமானம்.	குண்டு மாரி பொழிந்தது.
அல்பேனியா (Albania)		
ராணுவ கட்டடங்கள், மோட்டார் வண்டிகள், துருப்புக் கூட்டங்கள்.—டெபெலேனி (Tepeleni)—க்ளிஸுரா (Klissura) ரஸ்தா.	நஷ்டமில்லை.	பலத்த நஷ்டம்.
இதாலிய ஆபிரிக்கா (Africa).		
சைனியங்கள் இருக்கும் இடங்கள், கம்பியில்லாத் தந்தி ஆபீஸ், மோட்டார் வண்டிகள்.—ல்யூ (Lugh).	......	......
ரஸ்தாப்போடும் ஆட்கள் தங்கி இருக்கும் இடங்கள்.—டோலோ.	......	......
விமான நிலயத்தைச் சேர்ந்த கட்டடங்கள், சைனியங்கள் வசிக்குமிடங்கள்.—மாதீரா (Madera).	......	நேரே குண்டு வீழ்ந்தது.
26—2—41. (புதன்கிழமை).		
ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
பகலில்.—படை யெடுத்தல்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France).	......	......
கப்பல் துறைகள்.—கலே (Calais).	1 விமானம்.	துறைமுகத்தில் பல வெடிகுண்டுகள் வீழ்ந்தன.

தேதி.	பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
26—2—41. (புதன்கிழமை)—தொடர்ச்சி.			
	இரவில்.—சாமான் கிடங்குகள், ஆலைகள், எண்ணெய் சேமித்து வைத்திருக்கும் தொட்டிகள், இன்னும் இதர ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—கொலோன் (Cologne).	......	வெகு அதிகச்சேதம்; 150 இடங்களில் தீப்பிடித்து எரிந்தது.
	துறைமுகங்கள்.—புலாயின் (Boulogne), ப்ளஷிங் (Flushing) உள்பட இன்னும் இதர விரோதியின் ஆக்ரமிப்புக்குள் பட்ட துறைமுகங்கள்.	4 விமானங்கள்.	தீப்பிடித்தன.
	விரோதி விமான நிலயங்கள்.—வட பிரான்ஸ் (France).	......	2 விமானங்கள்.
	அல்பேனியா (Albania).		
	மோட்டார் வண்டிகள்.—டெபெலேனி (Tepeleni)க் கருகிலுள்ள லுஸாட்டி (Luzati).	......	பெருந்தீக்கள் சூழ்ந்தன.
	ராணுவ கூடாரங்கள்.—பேரி (Fjeri)	......	......
	துணைக்காவல் சாமான் கப்பல்கள்.—வலோனு (Valona).	......	நேரே குண்டு வீழ்ந்தது.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	கிடங்குகள், சைனியங்கள், சாமான் கிட்டங்கிகள்.—கெரென் (Cheren) பிரதேசம்.	......	தீப்பிடித்தன.
	சாமான் ஏற்றுமதி இறக்குமதி செய்யுமிடம்.—அஸாப் (Assab).	......	......
	வெடி மருந்துக் குவியல்கள், இன்னும் இதர ராணுவ முக்கியமான இடங்கள்.—மஸாவா (Massawa)வுக்கருகில்.	......	......
	ரயில் பாலம்.—அட்டிஸ் அபாபா (Addis-Ababa)வுக் கருகிலுள்ள ஹவாஷ் (Hawash).	......	ரயில் பாலமும், தண்டவாளமும் சிதறுண்டன.

தேதி.	பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
27—2—41. (வியாழக்கிழமை).			
	அல்பேனியா (Albania).		
	விமான நிலயங்கள், விமானக் கூடங்கள், இராஜாங்க காரியாலயங்கள்.—வலோனு (Valona).	......	......
	விமானச் சண்டை.—அல்பேனியா (Albania).	நஷ்டமில்லை.	9 விமானங்கள்.
	இதாலிய சைனியங்கள் குழுமியிருக்கும் இடங்கள்.—அல்பேனியா (Albania).	......	......
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	சைனியங்கள் வசிக்குமிடம்.—புர் அகாபா (Bur Acaba) சாமான் கிடங்குகள்.—இஹியா பாய்டோவா (Ihia Baidoa).	......	கட்டடங்கள் எரிந்து போயின.
	தரையில் நிறுத்தப்பட்டிருக்கும் லாரிகள்.—புர்ஜ் புர்டி (Burj Burti).	......	பலத்த நஷ்டம்.
	மோட்டார் வண்டிகள்.—யாவெல்லோ, (Yavello), நெகெல்லி (Neghelli) பிரதேசங்கள்.	......	தீப்பிடித்தன.
	வேவுபார்த்தல்.—ட்ரிபோலி (Tripoli).	......	......
28—2—41. (வெள்ளிக்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	கப்பல் நிற்குமிடங்கள்.— வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven).	......	......
	துறைமுகம்.—எம்டன் (Emden).	......	......
	விமான நிலயங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany), ஹாலந்து (Holland).	......	......
	அல்பேனியா (Albania).		
	விமானச்சண்டைகள் (பல இடங்களில்).—அல்பேனியா (Albania).	நஷ்டமில்லை.	26 விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன; மற்றும் பல சேதமாயின.
	கோண்ட்ரா (Condra) கிராமம்.—பெங்காஸி (Benghazi)க்கருகே, கெரெனு (Cheren)க்கருகே.	....	பெங்காஸி—1 விமானம் கெரென்-2 விமானங்கள்.

தேதி.	பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
28—2—41. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.			
	ரயில்வே ஸ்டேஷன்.—அஸ்மாரா (Asmara).	......	......
	போக்கு வரத்து.—டெஸ்ஸி (Dessie)க்கும் மத்தாலே (Mattale)க்கும் நடுவில் ரஸ்தாவில்.	......	......
	ஒத்தாசை செய்தல்.—எரிட்ரியா (Eritrea), அபிஸீனியா (Abyssinia)விலுள்ள சைனியங்களுக்கு.	......	......
	இதாலிய சைனியங்கள்.—கெரென (Cheren)க்குத் தெற்கே.	......	பலத்த நஷ்டம். பலருக்குக்காயம்.
	விமான நிலயம்.—ஸுலா (Zula).	......	1 பெரிய ஆகாயக் கப்பல் சேதமாயிற்று.
	ரயில் பாதை.—கெரென (Cheren)க்கும் அஸ்மாரா (Asmara)வுக்கும் மத்தியில்.	......	......
	ஒரு பெரிய மோட்டார் வண்டிகள் நிறுத்தி வைக்குமிடம், ரிபேர் செய்யுமிடங்கள்.—டெஸ்ஸி (Dessie).	....	......
	மோட்டார் வண்டிகள் நிறுத்தி வைக்குமிடம்.—நெகெல்லி (Neghelli).	......	......
1—3—41. (சனிக்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—படையெடுத்தல்—வடக்கு பிரான்ஸ் (France)ன் கடற்கரை.	......	4 விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன.
	க்யூபிரான் (Quiberon), டச்சுக் கடற்கரை (Dutch Coast).	நஷ்டமில்லை	பலத்த சேதம்.
	இரவில்.—தொழிற்சாலைகள்.—கொலோன் (Cologne).	......	......
	கப்பல்துறைகள், ரயில்கள், எண்ணெய் ஸ்தாபனங்கள்.—ரூர் (Ruhr), ராட்டர்டாம் (Rotterdam), புலாயின் (Boulogne).	......	நஷ்டம் அதிகம்.

தேதி.	பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
1—3—41 (சனிக்கிழமை)—தொடர்ச்சி.			
	அல்பேனியா (Albania).		
	விமானச்சண்டை.—டெபெலேனி (Tepeleni) பிரதேசம்.	நஷ்டமில்லை.	3 விமானங்கள்
	ஒத்தாசை செய்தல்.—அல்பேனியா (Albania)விலிருக்கும் கிரேக்க சைனியங்கள்.	……	……
	வெடிமருந்துக் துவியல்கள், சைனியங்கள் வசித்துமிடங்கள், கிட்டங்கிகள்.—வலோனு (Valona).	.. …	வெடிகளும், தீயும் கிளம்பின.
	கட்டடங்கள்.—பேராட் (Berat). …	……	பல இடிந்தன.
	விரோதி சைனியங்கள்.—புஸிக் (Buzi) கருகே.	……	……
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	விரோதி சைனியங்கள்.—கெரெனு (Cheren)க்கருகே.	……	……
	மோட்டார் வண்டிகள்.—அஸ்மாரா (Asmara) விமான நிலயம்.	……	……
2—3—41. (ஞாயிற்றுக்கிழமை)			
	ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	விரோதியின் துணைக்காவல் கப்பல்கள்.—வடகடல் (North Sea).	……	ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.
	விரோதி கடல் விமான நிலயம், விரோதி கப்பல்கள்.-டச்சு (Dutch)க் கடற்கரை.	……	……
	கப்பல்துறைகள், அங்கிருந்தும் கட்டடங்கள், "ஹிப்பர்" (Hipper) வர்க்கத்தைச் சேர்ந்த ஜேர்மன் யுத்தக்கப்பல்.—ப்ரஸ்ட் (Brest).	……	கட்டடங்கள் இடிந்தன; வெடிகளும், தீயும் கிளம்பின.
	விரோதி விமான நிலயங்கள்.—விரோதியால் ஆக்ரமிக்கப்பட்ட நாடுகள்.	2 விமானங்கள்.	……
	அல்பேனியா (Albania).		
	விமானக் கூடங்கள், கட்டடங்கள்.—பேராட் (Berat) விமான நிலயம்.	……	தரையிலிருக்கும் 2 விமானங்கள் நாசம்; மற்றும்பல சேதமாயின.

தேதி.	பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்
2—3—41. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	ஒத்தாசை செய்தல்.—அல்பேனியாவி (Albania)லிருக்கும் கிரேக்கத் துருப்புகள்.	......	2 விமானங்கள்.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	விரோதி சைனியங்கள், பீரங்கி வைத்திருக்கும் இடங்கள், மோட்டார் வண்டிகள்.—கெரேனை (Cheren)ச் சுற்றியுள்ள இடங்கள்.	......	பலத்த சேதம்.
	ராணுவ முக்கியத்வமுள்ள இடங்கள்.—புர்யி (Burye).	......	தீயும், வெடிகளும் கிளம்பின.
	ஒத்தாசை செய்தல்.—இதாலிய கிழக்கு ஆபிரிக்காவி (Africa)லுள்ள பிரிடிஷ் சைனியங்கள்.	......	......

தேதி.	விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
25—2—41. (செவ்வாய்க்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	இரவில்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia), ஒரு வடகிழக்குப் பட்டணம்; இரண்டு மிட்லண்ட்ஸ் (Midlands) பட்டணங்கள்	1விமானம்.	சொற்பச் சேதம். சிலருக்குக் காயம்.
	அல்பேனியா (Albania).		
	கிரேக்க சைனியங்கள்.—கொரிட்ஸா (Koritza) விற்கும், ப்ளோரினு (Florina)விற்கும் மத்தியிலுள்ள ரஸ்தா.	......	......
	மத்தியதரைக்கடல் (Mediterranean).		
	மால்டா (Malta)	...3 விமானங்கள்.	சேதமில்லை.
26—2—41 (புதன்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—லண்டனி (London)ன் சுற்றுப்புறங்கள், தென்கிழக்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு பட்டணம்.	......	சொற்பச் சேதம். சிலருக்குக் காயம்.

தேதி.	விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
26—2—41. (புதன்கிழமை)—தொடர்ச்சி.			
	இரவில்.—கெண்ட் (Kent), கிழக்கு ஆங்கிலியா (Anglia)க் கடற்கரைகள்.	......	சிலர் மாண்டனர். ......
	மத்தியதரைக்கடல் (Mediterranean).		
	மால்டா (Malta)—(இரண்டு தரம்).	2 விமானங்கள். 6 அநேகமாய் நாசமாயின.	சேதமுமில்லை; ஒருவருக்கும் காயமும் இல்லை.
27—2—41. (வியாழக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—லண்டனி (London)ன் சுற்றுப் புறங்கள், கிழக்கு ஆங்கிலியா (Anglia)வில் சில இடங்கள்; ஒரு கிழக்குக் கடற்கரைப் பட்டணம்.	2 விமானங்கள்.	சொற்பச் சேதம். சிலருக்குக் காயம்.
	இரவில்.—விமான நடவடிக்கையேயில்லை.	......	......
	கிரீஸ் (Greece).		
	ப்ரீவீஸா (Prevesa), ப்ளோரினு (Florina), கார்ப்யூ (Corfu).	......	சில பொது ஜனங்களுக்குக் காயம்.
28—2—41. (வெள்ளிக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—டோவர் (Dover) பிரதேசம் ...	......	சொற்பச் சேதம்.
	இரவில்.—ஹோம் கவுண்டீஸ் (Home counties), கிழக்கு ஆங்கிலியா (Anglia), லண்டன் (London).	......	சொற்பச் சேதந்தான்.
	மத்தியதரைக்கடல் (Mediterranean).		
	மால்டா (Malta) ...	......	விரட்டியடிக்கப் பட்டன.
1—3—41. (சனிக்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	பகலில்.—விமான நடவடிக்கையே இல்லை.	......	......
	இரவில்.—ஒரு பட்டணம்—இங்கிலாந்தி (England)ன் ஒரு கிழக்குக் கடற்கரைப் பட்டணம், ஸ்காத்லாந்து (Scotland), இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள்.	......	சொற்பச் சேதம். சிலர் கொல்லப் பட்டனர்.

தேதி.	விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும் படையெடுப்பால் விளைந்த சேதமும்.
1—3—41. (சனிக்கிழமை)—தொடர்ச்சி.			
	மத்தியதரைக்கடல் (Mediterranean).		
	மால்டா (Malta) ...	......	2 பொது ஜனங்கள் கொல்லப்பட்டனர்.
2—3—41. (ஞாயிற்றுக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—கிழக்கு கடற்கரை, வடக்கு ஸ்காத்லாந்தில் சில இடங்கள், கிழக்கு ஆங்கிலியா (Anglia).	......	சேதமுமில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை.
	இரவில்.—லண்டன் (London), தென் மேற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு சிறிய பட்டணம்.	......	வீடுகளுக்குச் சேதம். சிலருக்குக் காயம்.
	கிரீஸ் (Greece)		
	பூகம்பத்தால் மிகவும் சேதம் அதிகமாயிருக்கிற லாரிஸ்ஸா (Larissa).	... ..	நஷ்டம் அதிகமாவதற்கு முன் துரத்தியடிக்கப்பட்டன.
3—3—41. (திங்கட்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—கெண்ட் (Kent) கடற்கரை;	1 விமானம்.	1 விமானம்.
	கெண்டி (Kent)ல் ஒரு பட்டணம்.		சிலருக்குக் காயம்.
	இரவில்.—தென் வேல்ஸி (Wales)ல் ...	......	சிலருக்குக் காயம்.
	ஒரு பட்டணம்.—வட கிழக்குக் கடற்கரையில் சில இடங்கள்; தென்கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland), இன்னும் சில இடங்கள்.	... ...	சிலர் மாண்டனர். தீப்பிடித்தது. ஆனால் சீக்கிரம் அணைத்துவிட்டார்கள்.
	கிரீஸ் (Greece).		
	லாரிஸ்ஸா (Larissa)—பூகம்பத்தால் நாசமான நகரம்—தெஸ்ஸாலி (Thessaly)-யில் ப்ரீவிஸா (Prevesa).	......	இதாலிய கைதிகளுக்குக் காயம் பட்டது.

யுத்தக் குறிப்புகள்.

பூச்சாண்டி வேலை.

ரத்தம் கட்டிப்போகும்படி பயமுறுத்துவது நாஸிகள் வழக்கம். முன்னே அது ஒரு அளவிற்கு பிரயோஜனப்பட்டது. ஆயினும், அதை மறுமுறை கையாடப்பார்க்கிறார்களென்றால், காரியங்கள் சரிவர நடைபெறவில்லையென்பதற்கு ஒரு அடையாளமாக வைத்துக்கொள்ளலாம். கடைசியாக அவர்கள் இந்த வேலை செய்தது ஞாபகமிருக்கிறதா? பிரான்ஸ் அடிபட்டவுடன், பிரிடனைப் படையெடுப்பதற்கு நாஸிகள் செய்த வேலை பயனற்றுப் போகும்படி பிரிடன் வெற்றி அடைந்ததில் நாஸிகள் பிரமித்துப்போனார்கள். உடனே விட்டோமா பார் என்று ஏக ஆர்ப்பாடம் செய்தார்கள். பிரிடனைக் கீழே தள்ளி ஸெப்டம்பர் மாதத்தில் பெர்லின் நகரில் சமாதானம் பேசுவதாக வீசினார்கள்! ஜப்பான் மூவர் உடன்படிக்கையில் சேர்ந்தது! ஸ்பெயினை ஆக்கிரமித்து மத்தியதரைக்கடலையே அடைத்துவிடவேண்டுமென்று ஜெர்மானியர் அழைக்கப்பட்டார்கள்! அழும்புக்காரரான பிடேனைத் தள்ளி லவாலை வேலையிலமர்த்த ஏற்பாடு செய்தார்கள்; ஜப்பானும் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் நீர் வீழ்ச்சி பிரயோகமுகமாகச் சேர்ந்து அமெரிக்காவை யுத்தத்தில் சேராமல் பயங்காட்டி விரட்டுவதாகவும் சொன்னார்கள்; கைகொட்டி ஆரவாரம் செய்து முடிக்கவேண்டியது வினையெல்லாம் முடிந்துவிட்டதாகப் பேசினார்கள்.

ஆனால், ஏதோ 'ரகசிய கருவி' என்றார்களே, அதைப்போலவும், 'காந்த விசையுள்ள வெடி சுரங்கம்' என்றார்களே அதைப்போலவும், இதில் சரக்கில்லை; என்னமோ தட்டுக்கிடல் பலமாக ஹிட்லருக்கு ஏற்பட்டுவிட்டது. இதாலியரை விரட்டி விட்டு அல்பேனியாவை கிரேக்கர்கள் பிடித்துக்கொண்டார்கள்; வேவல் தளகர்த்தரும், முஸோலினியின் ஆபிரிக்க சாம்ராஜ்ஜியத்தை சுலபமாகக் கைப்பற்றிக்கொண்டார்; பிரிடனும் கிறிஸ்துமஸ் பண்டிகையை வழக்கம்போல் கொண்டாடிற்று. ஆகையால், வேறு வழியில்லாமல் சென்ற இரண்டு மாதங்களாக மிறட்டி பயங்காட்டும் வேலையை ஜெர்மானியர் பத்திரிகை மூலமாகவும், ரேடியோ மூலமாகவும் கிளப்பியிருக்கிறார்கள்.

ஜப்பான் ஜயபேரிகையடித்துக்கொண்டு தென் திசை, மேற்குத் திசை நோக்கிச் செல்லுமாம்! பால்கன் நாடுகளை துண்டு துண்டாக வாயில் போட்டுக் கொள்ளப்போகிறார்களாம்! பிரிடனை மறுபடியும் படையெடுக்குமுன், நீர் வீழ்ச்சிகளைக்கொண்டு செய்யப்படும் தாக்கல்களால், பசியும், பட்டினியும் பொறுக்க முடியாமல் பிரிடன் தானாகவே சமாதானத்திற்கு வருமாம்!

இந்தக் கதையால் என்ன பலன் ஏற்படக்கூடுமென்று ஆலோசியாமல் இரண்டொரு விஷயத்தை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவோம். ஒன்று.— சென்ற காலத்தில் நாஸிகளின் உக்கிரமான விழியையும், பயங்கரமான வாயையும், ஆட்டும் போடும் கைகளையும், பார்க்க என்னமாய் இருந்ததென்றால்

இங்கிலாந்தில் வயல் வரப்புகளில் பூசனிக்காயை எடுத்துக் குடைந்து குச்சி மேல் நட்டு சட்டைபோட்டு, நெருப்புப் பொறி பறக்கும் கண்கள் போலிருக்க வேண்டி ஓட்டைகள் செய்து, அவைகள் பின்னால் வத்திபை ஏற்றி வைத்து அதைப் பார்த்து குற்றமுள்ள நெஞ்சத்தவரும், பயங்காளிகளும் நடுக்கமெடுக்கச் செய்வது போலிருக்கிறது. அதைக் கண்டு ஒழுங்கான பேர்வழிகள் பயப்படுவதில்லை. இரண்டாவது.— பெரிய தலைவர்கள் வீச்சுகள் வீசுகிறதில்லை. அவர்கள் காரியங்கள் செய்வார்கள்—செய்த காரியத்தைப்பற்றி உள்ளது உள்ளபடி சொல்லுவார்கள். தளகர்த்தர் வேவல் என்ன செய்யப்போகிறார் என்று நமக்கு ஒருவரும் சொல்லவில்லை; அவர் திருப்திகரமாக செய்திருக்கும் வேலையை செய்தார் என்றதைத்தான் கேட்டோம். அமெரிக்காவிடமிருந்து கப்பற்படை உதவியும், ஆஸ்திரேலியாவிலிருந்து பட்டாள உதவியும், கேட்க பிரிடன் தீர்மானித்திருப்பதாக நாம் கேள்விப்படவில்லை. மலாய் நாட்டில் ஆயிரக் கணக்கான ஆஸ்திரேலிய துருப்புகள் வந்து இறங்கிவிட்டதாகவும், குவாம் (Guam) தீவிலும், இன்னும் இதர பசிபிக் சமுத்திர முக்கிய தீவுகளிலும் அமெரிக்கர் திரண்டிருப்பதாகவும் செய்தி கேட்கிறோம்.

இல்லை, போர் புரிவதில் ரகசியம் என்பது முக்கியம்; முறையற்ற காரியம் செய்யும்படி தேசத்தாரை தாஜாபண்ணவேண்டியிருந்தால்தான் இந்த விஷயத்தை மறப்பது. பல நோக்கங்கள் இருப்பதாகச் சொல்லி ஏமாற்றப் பார்த்தாலும் ரகசியத்தை வெளிவிடுவது என்றால் இப்படித்தான் இருக்கவேணும்.

நெருப்பின் பரவல்.

இருந்தபோதிலும், வெகு நெருக்கடியான சமயம் நெருங்குகிறது. ஐரோப்பிய யுத்தத்தில் ஜெர்மானியர் ஜயமடையவில்லை. அதனால் உலகம் முழுதும் யுத்தத்தை பரவச்செய்யப் பார்க்கிறார்கள். போலண்டு, நார்வே, பள்ளத்தாக்கு தேசங்கள், பிரான்ஸ், தோற்கடிக்கப்பட்டபோதிலும் பிரிடன் மசியாதவரை பிரயோஜனமில்லை. நாஸி மயமான ஐரோப்பாவை பிரிடிஷ் கப்பற்படை தீவிரமாக வளைத்து சாமான்கள் போகாமல் தடுக்கிறது; அடிமை யாக்கப்பட்ட நாடுகளில் பிரிடிஷ் மனோதைரியத்தைப் பார்த்து அழியா தைரியம் ஏற்படுகிறது. மறுமுறையும் சொல்லுகிறோம்—ஐரோப்பாவில் போரில் ஜெர் மானியர் தோல்வியடைந்துவிட்டார்கள். வெளிப்புறத்து தாக்கலாலோ, உள் நாட்டு புரட்சியாலோ, அவர்கள் மறுமுறை தோற்கடிக்கப்படுமுன், அவர்கள் தலையைச் சொரிந்துகொண்டு யோசனை பண்ணிப் பார்க்கவேண்டியதுதான்.

நெருப்புக் குண்டு.

ஹிட்லர், நமக்குத் தெரிந்தபடி, எப்போதுமே சர்வாதிகாரத்தில் நம்பிக்கை உள்ளவன். தன் 'புது முறை'யை பூரணமாகவும் உலகம் முழுதும் ஸ்தாபித்தாலொழிய அவன் கட்சியிழந்தவனாவான். ஆகையால், ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, இவைகளை ஜயிக்க படையெடுக்கப்போகும் சைனியங் களுக்குத் தளவாடங்களும் உணவுப்பொருள்களும் தயாரிக்க ஐரோப்பாவையே ஒரு பெருந் தொழிற்சாலையாகவும் பண்ணையாகவும் செய்யப் பார்க்கிறான்.

அவன் முறை நமக்குத் தெரிந்ததுதான்—அரசியல் வழியில் புகுந்து பொருளாதார வழியில் நெருக்கி, பிறகு பலாத்காரமாக திடீரென்று காரியங்கள் செய்வது; இந்த வேலை ஒரு அளவிற்கு ஐரோப்பாவில் பலித்து வந்திருக்கிறது. ஒரு அளவிற்கு என்பதில் விஷயமிருக்கிறது. பிரிடன் இன்னும் தலைநிமிர்ந்து நிற்கிறது. ஹிட்லரின் பெரும் வெற்றிகாலங்களைக் காட்டிலும் இப்போது ஜாஸ்தி பலமாகவே இருக்கிறது. மேலும், அதன் வெற்றிகள் எல்லாம் ஐரோப்பாவிலில்லாத ஒரு பெரிய தேசத்திற்கு யோசனைசெய்து காரியங்கள் செய்ய அவகாசம் கொடுத்தது. சரி, இன்னமும் முழுப்போடாய் போட வேணும் என்கிறான் ஹிட்லர். பிரிடன் மட்டுமல்ல, அதன் சாம்ராஜ்ஜியமே எதிர்க்கப்படவேணும். "அதை இரண்டாய் வெட்டுகிறேன், டாக்கரிலிருந்து அலெக்ஸாண்டிரியா வரை நான் அதிகாரம் செலுத்துகிறேன்; அதற்காக ஸிஸிலி (Sicily)-க்கும் டியூனிஸ் (Tunis)-க்கும் இடையேயுள்ள ஜலசந்தியை ஒரு புது ஸூயெஸ் கால்வாயாகச் செய்வேன். அமெரிக்காவிற்குப் பேட்டியாக ஜப்பானைக் கிளப்பிவிடுகிறேன். இந்த யுத்தமென்ற சமுத்திரத்தில் குதிக்க பால்கன் நாடுகளை ஒரு மேடையாக்க கைப்பற்றிகொள்ளுவேன். அங்கிருந்து பிரிடனுக்குத் தாண்டுவதென்றால் வெகுதூரமாச்சே என்கிறீர்களோ? இங்கிலாந்தையே முதலில் படையெடுத்து என் திறமையைக் காட்டுவேன்" என்று நினைக்கிறான் ஹிட்லர்.

பித்துப்பிடித்தவன்.

நடந்ததை பார்த்தீர்கள் அல்லவா? ஹிட்லர் போகாத ஊருக்கு வழி தேடும்படி அடிக்கப்படுகிறான். அவன் முறை ஒரு அளவிற்குப் பலித்தது— பிறகு, சமயம் சந்நிவேசம் சந்தர்ப்பம்—அதாவது, பிரிடிஷாரின் ஊக்கம், கட்சி வலிமை, சக்தி—முன்னுக்கு வந்தன. இப்போது தான் கிளப்பிய பேயையே அவன் எதிர்க்க வேண்டியதாயிற்று. ஆனது ஆகட்டுமென்றுதான் உடமை யெல்லாம் பரிசாக வைத்து சொக்கட்டான் ஆடவேண்டி வந்து விட்டது— ஆட்டம், உலக யுத்தம்.

சண்டைக்கு அழைப்பு.

ஜெர்மனியில் ஹிட்லரால் ஏமாற்றப்பட்டவர்களும் தென்கிழக்கு ஐரோப்பாவில் பயத்தால் நடுக்கமெடுத்தவர்களும், இந்தக் குறிப்புகளைப் படிக்கமாட்டார்கள்; ஆயினும், யாரும் இவைகளின் உண்மையை மறுக்க முடியாது.

200-வருஷகாலமாக பிரிடனின் கப்பற்படை மூன்று பெரிய காரியங்கள் செய்ய இடங் கொடுத்துவந்திருக்கிறதுபோல் இப்போதும் செய்கிறது. அவை யாவன:—

(a) பெரிய சக்திவாய்ந்த ஐரோப்பிய நாடாகவும்;

(b) ஒரு பெரிய சாம்ராஜ்ஜியத்திற்கு அச்சாகவும்;

(c) ஐரோப்பிய படையெடுப்பன்னியில் அமெரிக்கா சாவதானமாகவிருக்கவும் பிரிடன் கப்பற்படை ஹேதுவாக யிருக்கிறது.

ஆகையால் ஹிட்லரால் பிரிடன் தோற்கடிக்கப்படாததின் பயன் பிரிடன் மட்டும் அடையவில்லை, ஐரோப்பா மட்டும் அடையவுமில்லை. ஆபிரிக்காவில் நமது படையை, பிரிடனில் ஆபத்தான நிலைமையாக இருந்தபோதிலும், ஜாஸ்தி பண்ணி ஒரு சாம்ராஜ்ஜியத்தையே அடிக்கும் படையாக செய்ய முடிந்தது துருப்புகளும், யுத்த தளவாடங்களும், உணவுப் பொருள்களும் நினைத்த இடத்திற்கு அனுப்பி எங்கு பார்த்தாலும் விரோதியை எதிர்க்க தயாராக இருக்கும்படி கடல் வழியை காபந்துசெய்துவந்திருக்கிறோம். நமது வெற்றி பொருந்திய எதிர்ப்பைக் கண்டு, அமெரிக்காவும் தனக்கு விளையக்கூடிய ஆபத்தை யும் உணர்ந்து ஒரு அளவிற்கு சுயநலத்தையும் கருதி ஆங்கிலேயருக்கு உதவி புரிய முன் வந்தது. முடிவாக, யுத்த ஆயத்தமான ஒரு சாம்ராஜ்ஜிய தலைவராக வும் அமெரிக்காவின் சுதந்திர காப்பிற்கு முன்அணியாகவும் பிரிடன் ஆயிற்று. ஹிட்லர் எதிர்க்க வேண்டிய தேசம் இத்தகைய தேசம்.

ஒரு புது துணைவர்.

இந்தத் தலையங்கத்தால் ஏதேனும் ஏமாற்றல் ஏற்பட்டால் மன்னிக்க வேணும்! வடக்குப் பனிப் பிரதேசங்களாவது, ஆபிரிக்கா உஷ்ண பூமியாராவது பிரிட னுடன் திடீரென்று உடன்படிக்கைகள் செய்துகொண்டாரென்று நான் சொல்ல வில்லை. இந்த யுத்த நிலயமானது பிரசங்கங்கள் போக மற்றுமொரு செய்திகருவி சேர்த்திருக்கிறது. இந்தப் பத்திரிகையை நீங்கள் படித்து முடித்தவுடனேயே யுத்த சம்பந்தமான படங்களும் அவைகளைக் காண்பிக்க சினிமா யந்திரங்களும் எங்களுக்குக் கிடைக்கப் போகின்றன. அவைகளை நீங்கள் பார்த்து இந்த பத்திரிகையில் படிக்கும் விஷயங்களையும், பிரசங்கங்களில் கேட்கும் விஷயங் களையும் நேராடி பார்க்கலாம். ஒரே சமயத்தில் 1,000 பேர் வரை இப்படங்களை பார்க்கலாம்; ஒவ்வொரு மாதமும் 50-நிமஷ நேரம் நடக்கும். படநிகழ்ச்சியை 60 கிருமங்களில் காட்டப்படும். இது சம்பந்தமாக இந்த விஷயத்திற்கு அனுசரணையாக W. I. B. என்று பெயர் வரையப் பட்ட ஒரு லாரி வாங்குவதில் உதவிசெய்த யுத்த நிதிக்காக தமாஷுக்காக நடத்தும் எண்டர்டெயின்மெண்டு கமிட்டியாருக்கு எங்கள் மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறோம்.

பிரிடன் பேசுகிறது.

குருதிசயத்தைப்பற்றிய ஒரு அழகிய சிந்தனை.

இங்கிலாந்தில் லங்கெஷைர் என்ற ஜில்லாவிலுள்ள ஒரு கீர்த்தி பெற்ற ஆசிரியர் ஜே. எல். ஹாட்ஸன் என்பவர் எழுதுகிறார் :—

யுத்த நிருபர்கள் என்று அழைக்கப் படுவர்களைச் சேர்ந்தவன் நான். போர் நடப்பதை அருகிலிருந்து கவனிக்கும் வேலை என்னுடையது. டன்கர்க்குக்கு முன்னாலும், டன்கர்க்குக்குப் பிறகும் போர் செய்வதைப் பார்த்தேன். பெர்லின் நகரின் பேரில் வெடி போடப் போவதையும் கவனித்திருக்கிறேன். அவர்கள் திரும்பிவந்த போது வரவேற்றிருக்கிறேன். சிறிய யுத்தக் கப்பல்களைப் பார்க்கப்போயிருக்கிறேன். இரவுகளில் லண்டன் நகரில் ஜெர்மன் வெடி விமானங்களின் மேல் விமான எதிர்ப்பு பீரங்கிகள் சுடுவதை கண்டிருக்கிறேன். தேடு வெளிச்சங்கள் ஆகாயத்தில் ஒளி நிறப்பப் பார்த்திருக்கிறேன். எனக்கு அந்தக் காரியங்களைச் செய்யும் ஆஸாமிகளைத் தெரியுமென்று சொல்லிக்கொள்ளவில்லை. உண்மையில் அவர்களை அறிவதென்பது எனக்கு சிரமமாகயிருக்கிறது. நான் சென்ற யுத்தத்தில் போர்புரிந்த மனிதர்களைச் சேர்ந்தவன். என் மகன் இந்த யுத்தத்தில் விமானப் படையிலிருக்கிறான். இந்தத் தலைமுறையில் இருக்கும் மனிதர்கள் வெகு அஸங்கதமான காரியங்களைச் செய்யும்படியாக என் தலைமுறையிலுள்ளவர்கள் செய்துவிட்டோமென எனது அபிப்பிராயம். அவர்களை ஒரு பொறுக்கமுடியாத நிலையில் மூழ்கடித்துவிட்டோமென நான் நினைக்கிறேன். ஆகையால் இப்பொழுது நாம் அக்கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியிருக்கிறதென்றால் அது பொருத்தமாகும்.

இன்று நமக்காகப் போர்புரியும் இளைஞர்களுக்கும் அந்த விஷயம் நன்றாகத் தெரியும். ஆனால், அவர்கள் அதை வெளியில் சொல்லிக்கொள்ளுகிறதில்லை. அவர்கள் என்னைப்போன்ற மூதாதைகளைப்பற்றி குற்றங்கூறி இப்பொழுது இந்த ஹிட்லரையும் அவன் ஜமாவையும், அவன் சேனையையும், விமானப் படையையும் தாங்கள் எதிர்க்கவேண்டியிருக்கிறதேயென்று ஒரு தபாகூடச் சொன்னதேயில்லை. உண்மையில் எனக்கு இது புரியவேயில்லை. சில மாதங்களுக்குமுன் நம் விமானிகள் பத்து எதிரிகளுக்கு ஒருவராகச்சென்று போர்புரிந்ததுபோலும் இப்பொழுது மூன்றுக்கு ஒருவராக ஒருநாளைக்கு 4, 5 தபாக்கள் உயரே சென்று போர்புரிவதுபோலும். நானும் ஆகாயத்தில் போய் போர்புரியவேணுமென்று விரும்புகிறேன். அப்பொழுது அதைப்பற்றி எவ்வளவோ சொல்லுவேன். நீங்கள் சற்று அவ்விமானிகள் என்று பாவித்துக்கொள்ளுங்கள். நீங்கள் அவ்வேலையை எவ்வளவுதூரம் விரும்புவீர்கள் ? திரு. சர்ச்சில் அதைப்பற்றி வெகு ரஸமாகச் சொல்லியிருக்கிறார். " இவ்வளவு சிறுபாலாருக்கு இவ்வளவு பெரும்பாலார் கடமைப்பட்டதென்பதுஇதுவரை

ஒருபோதும் கிடையாது.'' "இவ்வளவு பெரும்பாலார்'' என்றபோது உங்களேயும் என்னேயும் தான் குறிப்பிட்டார். ஆனல், திரு. சர்ச்சிலுடைய வசனங்களைப்பற்றி விமான வாலிபர்கள் என்ன சொன்னர்களென்று நினேக்கிறீர்கள்?' அதைப்பற்றி ஹாஸ்யமாகச் சொல்லிக்கொண்டார்கள். "ஓஹோ! பிரதம மந்திரி நம் சாப்பாட்டுத் திட்டத்தைப்பற்றியல்லவோ சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு பெரும்பாலார் இவ்வளவு சிறுபாலாருக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது.'' இதிலிருந்து நம் விமான வாலிபர்களின் இயற்கை தெரியவரும். அவர்கள் தங்களே வீரர்களாகச் சொல்லிக்கொள்ள மறுக்கிறார்கள். யுத்தம் அவர்களுக்கு வசீகரமாக இல்லே. அதைப்பற்றி அவர்களுக்கு வெகுவாகத் தெரியும். சென்ற யுத்தத்தைப்பற்றி புத்தகம் படித்திருக்கிறார்கள். வெள்ளி திரையிற் கண்டிருக்கிறார்கள். அவர்கள் வெகு நாட்களாக கற்றுக்கொண்டு வருகிறார்கள். சீனவிலிருந்து வரும் சமாசாரம், அபிஸீனியாவிலிருந்து வந்த செய்திகள், ஸ்பெயின், போலண்டு, பின்லாந்தின் செய்திகள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும். சென்ற மாரி காலத்தில் பிரான்ஸில் என்ன சொல்லிக்கொண்டார்கள் என்றால் "இந்த யுத்தத்தில் ஒருவருக்கும் உத்சாகமில்லே'' என்பது. ஆம், ஏன் இருக்கவேணும்? பல்லேப் பிடுங்கிக்கொள்ள பல் வைத்தியக்காரனிடமோ, வயிற்று வலிக்காக ஆப்ரேஷனுக்கு டாக்டரிடமோ போவதில் உத்சாகமிருக்குமா என்ன! அவைகள் அவசியம் செய்யப்படவேண்டியவை. அப்படித்தான் இந்த யுத்தத்தைக்கருதுகிறார்கள். அதுவேணுமென்று சொல்லவில்லே. நின்றுபோனல் சந்தோஷிப்பார்கள். ஆனல் ஆபரேஷன் செய்துதான் ஆகவேணும். எடுக்கவேண்டிய பற்களே பிடுங்கித்தான் ஆகவேணும். அதில் அவர்களுக்கிருக்கிற தீர்மானத்திஞல் அவர்கள் அதைப்பற்றி பகிரங்கமாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். நானும், என் நண்பரும் ஒரு துருப்புக் கப்பலில் பிரஞ்சுதேசத்துக்குச்சென்ற ஜூன் மீ இரண்டாவது தபா போனேம். அப்பொழுது என் நண்பர் சில போர் வீரர்களேக்கண்டு, "ஜெர்மனியனே அடிப்பதில் உனக்கு சந்தோஷமிருக்கும் என்று நினேக்கிறேன்'' என்று சொன்னர். "ஆம் உண்மைதான். ஆனல் பிறகு திரும்பிவர வேணுமென்று விரும்புகிறோம்'' என்று விடையளித்தார்கள். ஜெர்மானியப் போர்வீரர் இவ்வாறு பேசுவார் என்று நினேக்கவில்லே. அவர்கள் தங்கள் எதிரியை எவ்வாறு ஒழிப்பார்கள் என்றும் எவ்வாறு ஹிட்லர் மேதாவி என்றும், தாங்கள் ஆரியர்கள் என்றும் இம்மாதிரியான உளரல்கள் நிரம்பிய பேச்சுகளில் அமர்ந்திருப்பார்கள். அவர்களுக்கு இப்பொழுது கொஞ்சம் புத்திவந்திருக்கும். ஆனல் "அடுத்த வாரத்திற்குள் எதிரியை அடித்து நொறுக்கி விடப்போகிறோம் என்று பெருமை பேசிக்கொள்ளும், பிரிடிஷ் யுத்த வீரரை நீங்கள் காணமுடியாது. "நான் சாகப்போவதில்லே வீட்டிற்குப் போகப் போகிறேன்'' என்று ஒருக்கால் பாடிக் கொண்டிருக்கலாம். வீட்டிற்குப் போகவேண்டியதுதான் என்று பேசிக்கொண்டிருப்பார்கள். ஆனல் வீட்டிற்குப் போகமாட்டார்கள்.

இதுவே அவர்களுடைய குணம். அவர்கள் பார்த்தால் அதிருப்தியோடு கோபங் கொண்டவர்களாக வெகு தாழ்த்திப் பேசிக் கொள்ளுகிறவர்களாகவும் இருப்பார்கள் இது சாதாரணப் படையாட்கள் மட்டுமல்ல. ஒரு மோட்டார் பீரங்கியணியின் தலைவர் சென்ற வாரம் என்னைக் கண்டு, "இந்த மின்னற்படை எடுப்பில் நாசமான பத்து பிரிடிஷ் நகரங்களின் பெயர்களை என் மோட்டார் பீரங்கிகளுக்கு இட்டிருக்கிறேன்" என்று சொன்னார். இதைக் கேட்ட ஒரு படையாள் "ஐயா, ஒரு மோட்டார் பீரங்கிக்காவது என்னுடைய கிராமப் பெயர் வைப்பதற்குப் பாக்கி வைத்து இருங்கள். ஜெர்மானியர் இன்னும் என்னூருக்கு வரவில்லையே" என்றான். ஆயிரம் வருஷமானாலும் ஹிட்லருக்கு இந்த மனோநிலையை அறியமுடியாது.

நம் விமானிகளே இந்நாள் க்ஷத்திரியர்கள். அவர்கள் ஸமூஹத்தில் நடுத்தர வகுப்புகளிலிருந்து எடுக்கப்படுகிறார்கள். அவர்களிடமும் மேற்சொன்ன நல்ல குணம் குடிகொண்டிருக்கிறது. அவர்களைக் கலங்கச்செய்வது கடினமே. அதில் ஒரு சாரார் ஆகாயச் சண்டைகளை ஒரு விளையாட்டாகக் கொள்ளுகிறார்கள். மற்றொரு சாரார் ஓட்டும் சக்கரத்தினிடம் உட்கார்ந்து வெகு உக்கிரமான நோக்கத்தைப் பூண்டு வேலையை ஆரம்பிக்கிறார்கள். நான் பெரிய வெடிவிமானத்தில் விமானியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். அவர் முகம் சிலையுருவத்தின் முகம் போலிருந்தது. நாங்கள் கீழே இறங்கினவுடன், அபாயத்தை நினைத்து முகம் கடுத்ததாவென்று வினவினேன். இல்லை. அது ஸகஜமான தோற்றம். சென்றவர்களில் சிலர் திரும்பிவராவிடினும், வந்தவர்கள் வேடிக்கையாக இருப்பது ஸகஜம் என்றான். மேற்கே போனவர்களைப் பேசுவதில்லை. அப்படிச்சொல்லுவதாயிருப்பினும், அவர்கள் "டிரேக்கு" க்குள் விழுந்ததாகச் சொல்வது வழக்கம். டிரேக்கு என்றால் மாரிகால மகாஸமுத்திரங்களுக்குப் பெயர். அவர்கள் அவர்களுடைய தந்தையரைக் காட்டிலும் தீர முள்ளவர்கள். ஆனால் அதோடு சற்று ஏளனம் செய்யும் இயற்கையைப் பழகி கொண்டிருப்பதால் அவர்களுடைய உண்மைக்குணம் கண்டு பிடிக்க முடிகிறதில்லை. ஒரு மனிதன் ஒரு நாளைக்கு மூன்று நான்கு தபாக்கள் ஆகாயத்தில் பறக்கவேண்டியிருந்து, போனவன் திரும்பி வருவது நிச்சயமில்லையென்றால், அவர்களுக்கு மேற்கண்ட குணமிருப்பது பிசகல்ல. ஆனால் அவர்கள் திரும்பி வருவார்களாவென்று பேசி கொள்ளுகிறதில்லை. அந்த விமானிகளில் ஒருவர் முந்தி போலீஸ் காரராக யிருந்தவர். அவர் "இந்த யுத்தத்தில் நாங்கள் இறந்து போய்விடுவோமோ வென்று கவலைப் படவில்லை. இந்த யுத்தத்திற்குப் பிறகு அதன் க்ஷவரக்கத்திகள் விற்கப் போகிறோமா அல்லது பட்டு காலுறைகள் விற்கப்போகிறோமா?" என்று சொன்னார். இந்தக் கவலையும் எப்போதும் இருக்கிறதில்லை. ஒரு விமானி "நான் பெர்லினில் அண்டர் டென்லிண்டன் என்ற பகுதிக்கு மேல் பறந்து செல்லும்போது என் 34-வது பிறந்த நாள் வந்தது. உடனே எங்களுக்குள் இருக்கும் டெலிபோன்மூலம் என் நண்பரிடம்

அந்த விஷயத்தைச் சொல்லிப் பாடினேன்." என்றார். இம்மாதிரியாக வேடிக்கையாகப் போர் மத்தியிலிருப்பது அவர்களால்தான் முடியும். அன்றொரு நாள் இரவு விமானங்கள் வெடி வீசும்போது விமான எதிர்ப்பு பீரங்கிகாரர்களிடம் இருந்தேன். அவர்கள் பெல்பாஸ்ட் நகரத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் ஒவ்வொரு குண்டு பீரங்கியிலிருந்து விடுக்கும்போது "இது டாரதிக்கு" "இது கிளாடிஸ்ஸுக்கு" என்று அவரவர்களின் காதலிகளின் பெயரைச் சொல்லி விடுத்தார்கள். அவர்கள் தாய், தகப்பன், அண்ணன் தம்பி பெண்டு பிள்ளைகளின் ஜாப்தாவை காலி செய்தார்கள்.

அதுபோலவே அவர்கள் டன்கர்க்கு துறைமுகத்திற்கு பின்வாங்கினபோது சிலர் கூண்டுகளில் குருவிகள் வைத்திருந்தார்கள். வெல்லிங்டன் கோமகனின் படையணியில் உள்ள ஒரு வண்டியில் ஒரு முயலை வைத்துக் கொண்டு ஓட்டினான். "கருங்காப்பாளர்" என்ற அணியில் தலைவர்கள் ஒரு ஆட்டையும் கன்றுக்குட்டியையும் பிடித்துக்கொண்டே சண்டைக்குச் சென்றார்கள். "கன்றைக் கொண்டு போனதால், ஒவ்வொரு சமயம் அதில் சாய்ந்துகொள்ள வசதியேற்பட்டது" என்றார் அவர்களில் ஒருவர். பின்வாங்கும் யுத்தத்தை எவ்வாறு நடத்தினார்கள் என்று அவர்கள் சொல்ல மறுப்பார்கள். எவ்வாறு இங்கிலீஷ் கால்வாயில் அச்சமயம் ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது; எவ்வாறு தண்ணீரில்லாமல் பால் கறந்தார்கள், எவ்வாறு ஆண் பிள்ளைகளின் ஆடைகள் நனைந்து கிடந்தபோது பெண்களின் உடைகளில் காயப்பட்டவர்களை படுக்க வைத்தார்கள், தலையில் பௌலர் தொப்பிகளுடன் எவ்வாறு போர் புரிந்தார்கள் என்றெல்லாம் சொல்லமாட்டார்கள்.

தைரியத்தைத் தவிர மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவார்கள். ஆனால் தைரியம் குறைவில்லை. "கருங்காப்பாளர்" என்ற படையின் கர்னல் தனக்குத் தெரியாத ஒரு பீரங்கி மோட்டாரைக் கண்டாராம். தன் கை குச்சியுடன் அதன் எதிரே சென்று நின்று "நான் ஒரு பிரிடிஷ்காரர்" என்றாராம். அது ஓடி விட்டதாம். லோவேயின் நகரத்தில் சண்டை நடக்கும்போதே ஒரு டாக்டர் ஒரு பெண்ணுக்கு பிரஸவத்தில் மருத்துவம் செய்தாராம். அந்த டாக்டர் லாஸேல் கடற்கரையில் நடந்து—கொண்டிருக்கும் போது சவங்கள் மத்தியிலும், குற்றுயிராயிருப்பவர்களின் மத்தியிலும் இருந்து ஒரு குரல் கேட்டது. "அதுயார் இரண்டாவது கிரனேடியர்ப் படையா" என்று குரல் கேட்டது. டாக்டர் போய்ப் பார்த்தார். அவனுக்கு கோரமான காயங்கள் ஏற்பட்டிருந்தன. "கிரனேடியர்கள் போய்விட்டார்கள் என நினைக்கிறேன். நான் உன்னை எடுத்துக்கொண்டுபோக ஒரு சிவிகை கொண்டுவருகிறேன்" என்று டாக்டர் சொன்னார். "ஐயா, அணி வரிசையை விட்டு நகர உத்தரவு கொடுங்கள்" என்றார். ஒரு கிரனேடியன் அதுதான் கேட்பான். இந்த யுத்தத்தில் மற்றொரு விசேஷ மென்னவென்றால் ஒவ்வொருவரும் மற்றவருடையகஷ்டங்களைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தார்கள். கடலில் கஷ்டப்படுகிறவர்கள் நிலப்படைகள் என்ன கஷ்டப்படுகின்

றனவோ என்கிறர்கள். விமானத்தில் இருப்பவர்கள் "நாங்கள் கப்பல்களில் இருந்து அங்கும் இங்கும் அலேக்கழிப் பட மாட்டோம்" என்கிறர்கள். கீழே செல்லும் நாசகாரிகள் தங்களுக்கு சரியான வேட்டை கிடைக்கிறது என்று திருப்தியடைகிறர்கள். "பாவம் உயரப்பறப்பவர்களுக்கு கஷ்டம். அட்லாண்டிக் மகாஸமுத்திரத்தின் பேரில் பனிக்கடலின் பேரில் செல்லும் போது வெளியே குதிக்க வேணுமென்றல்" என்கிறர்கள். ஒரு தோணி வெடியால் உடைக்கப்பட்ட கப்பலிலிருந்து மிதந்து கொண்டிருந்த ஒரு மாலுமியை மீட்க ஒரு கப்பல் போன போது "அடே சேரவாராதே பக்கத்தில் வா" என்று கட்டளேயிட்டானும் கடலில் மிதந்த மாலுமி. இதிலிருந்து இவர்கள் எல்லாம் எவ்வளவு வைரம் பாய்ந்த கட்டைகள் என்று தெரியும். ஆயிரம் ஹிட்லர்கள் கூட அவர்களே ஒன்றும் செய்ய முடியாது. படையெடுப்பைப்பற்றி பேசும்போது "அவர்கள் இங்கு வந்தால் தீட்டிவிடுவோம் என்று ஒருவர் சொன்னர். வேண்டிய மோட்டார் பீரங்கிகள், விமானங் கொடுத்தால் வேலையைச் செய்ய அவர்கள் தயார். அவைகளேக் கொடுக்கவேண்டியகடமை உங்களது என்னுடையதுவே."

படையெடுப்பைப்பற்றிய சில உண்மைகள்.

பிரிடனேப் படையெடுக்கக்கூடிய விதங்கள்.

பிரிடனுக்கிருக்கும் பலம்.

நில, நீர், ஆகாயப்படைகள் உதவக்கூடிய விதங்கள்.

ஆர். எ. கெ. என்ஸர், ஸன்டே டைம்ஸில் எழுதியது.

பிரிடனேப் படையெடுக்கப்போவதாகச் சில சமயங்களில் பேச்சுக்கிளம்புவதும், ஓய்வதுமாகவிருக்கிறது. சில சமயங்களில் தேதியைக்கூட குறிப்பிடுவார்கள். அந்தத்தேதி வந்துபோனவுடன் பேச்சு ஓய்ந்துவிடும்; அல்லது, உண்மையில் அந்தத்தேதியில் எதிரியானவன் படையெடுக்கப் புறப்பட்டு, கடலேக் கடக்கும் சமயத்தில் மாய்ந்துபோய் அவன் பிணங்கள், அலேகளால் கொண்டுவரப்பட்டு, பிரிடனுடைய கரைகளுக்கு வந்து ஒதுங்கலாம். இந்த யுத்தத்தில் பிரிடனே எதிர்ப்பதாகச் சொல்லுவதுபோலவே சென்ற யுத்தத்திலும் ருஷ்யா வரப்போவதாக வதந்திகள் உண்டாகிப் பிறகு பொய்யாயின.

எதிரி வந்துவிடப்போவதாக வதந்திகளுண்டாகி ஒருசமயம், திகிலேற்படும். மற்றொருசமயம், வரமுடியாதென்று அசட்டுத் தைரியமேற்படும். இந்த இரண்டு மனேபாவங்களும் சரியல்ல. மிஸ்டர் சர்ச்சில் சொல்லும்படி நடந்து கொள்ளுவதுதான் சரி. அவருக்கு உண்மைதெரியும். அவர் படையெடுப்பை எதிர்பார்த்தவண்ணமாயிருக்கவேண்டுமென்று எச்சரித்திருக்கிறர். நாம் மூட பயத்தோடிராது படையெடுப்பைப்பற்றிய விவரங்களேத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நீர்மூழ்கிகளைக்கொண்டு படையெடுப்பது வெற்றியைக் கொடுக்கக்கூடிய தில்லை. சீக்கிரத்தில் முடிவுபெறக்கூடியதுமில்லை. படையெடுக்க நிலப்படைகள் அவசியம். இதுவரையில் ஜெர்மனியின் வெற்றிகள் நிலப்படையைக்கொண்டு தான் ஏற்பட்டிருக்கின்றன. விமானப்படையும் சேரும்: அது உபகரணமா யிருக்குமே அல்லாது, பிரதானமாகாது.

படையெடுப்பு சிறிதாயிருக்கலாம், பெரிதாயிருக்கலாம்.

சிறிய வகையில், எந்தச் சமயத்திலும் எந்த இடத்திலும், பிரிடனை எதிர்க்க லாம். இதற்கு எதிரிகளில் சிற்சிலர், ஒரு விமானம், அல்லது ஒரு கப்பலில் வந்து, மோட்டார் ஸைக்கிள், துப்பாக்கிகளோடு இறங்கி, டெலிபோன்கள், தொழிற்சாலைகள், கிட்டங்கிகள், யந்திரசாலைகள் முதலிய இடங்களுக்குள் வேகமாய்ப் புகுந்து தீ வைத்து, பயமுறுத்தி சேதமாக்கலாம். ஆனால், இவர் களுக்குத் தடையின்றி, உணவுப்பொருள்களும், வெடிகளும் அக்கரையிலிருந்து வந்துகொண்டிருக்கவேண்டும். இவ்விதம் வருபவர்கள் முடிவில் பிடிபட்டு இறப்பது நிச்சயம். இறப்பதற்குள் பலவாருன தீங்குகளை விளைவித்துவிடலாம்.

இவர்களால் ஏற்படக்கூடிய அபாயத்தைத் தடுக்கவே உள்நாட்டு ரக்ஷகப் படை ஒன்று இப்பொழுது பிரிடனில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் வெகு வாய், சென்ற யுத்தத்தில் சண்டைசெய்த வயோதிகர்கள் சேர்ந்திருக்கிருர்கள். இவர்கள் யுத்தகளத்துக்கு இப்பொழுது போகமுடியாமல் போனாலும், உள் நாட்டிற்குள் நுழையும் விரோதிகளைப் பிடித்துக்கொள்ளுவார்கள்.

ஆனால், சிற்சில பெயர்களுடைய ஆக்கிரமத்தால் மட்டும் பிரிடன் பிடிபட்டு விடாது. அதற்கு ஒரு பெரிய படைவந்து இறங்கவேண்டும். அதற்குச் சாதக மாக டாங்குகளும், பீரங்கிகளும், பாலங்களையும், ரஸ்தாக்களையும் கட்ட எஞ்ஜினியர்களும், விமான நிலைய சிப்பந்திகளும். ஸப்ளை சாமான்களும், ஆஸ்பத்திரியும், பெட்ரோலும், வெடிகளும் கூடவரவேண்டும்.

இவைகளையெல்லாம் ஆகாய மார்க்கமாய்க் கொண்டுவரமுடியாததலால் கடல் வழிதான் வந்தாகவேண்டும். இதற்கு இங்கிலீஷ் கால்வாயில், இருபக்கமும் கடற்கண்ணிகளைப் பாவி, ஒரு வழிசெய்துகொண்டு, கப்பல்களை ஓட்டி, பிரிடனில் ஸஸக்ஸ், எஸக்ஸ், கெண்ட் துறைமுகங்களிலிறக்கவேண்டும். இக்கண்ணிகளை பிரிடிஷ் யுத்தக்கப்பல்கள் கலைக்கப்பார்க்கும். இதைத்தடுப்பது கஷ்டம்.

ஆகவே யுத்தக்கப்பல்கள் அணுகாதபடி செய்ய எதிரியானவன் அக்கரையில் பீரங்கிகளை நாட்டி வெகுதூரத்தில் குண்டுகளைப்போடப் பார்க்கலாம். ஆனால் இது மட்டும்போதாது. மேலேயிருந்து விமானங்களைக்கொண்டு கப்பல்களை எதிர்க்கவேண்டும். நார்வே, ஹாலண்ட், பெல்ஜியம், பிரான்ஸ் தேசங்களை ஜெர்மனி விமானபலத்தைக் கொண்டுதான் பிடித்தது. இரவில் ஒளிந்துகொண்டு இரண்டொரு விமானங்கள் வந்தால்மட்டும் போதாது; பகலிலும், எந்த சமயத்திலும், எந்த உயரத்திலும் எதிர்க்கமுடியவேண்டும்.

விமான பலத்தைக்கொண்டுதான் ஜெர்மனியானது ஐரோப்பாவிலும், பிரிடனானது ஆபிரிக்காவிலும், ஜயித்து வந்திருக்கின்றன. விமானங்களுக்குமுன் சைனியங்கள் எதிர்நிர்க்கமுடியாது. ஆனால் யுத்தக்கப்பல்களும் எதிர்நிர்க்க முடியாதா வென்பதுதான் கேள்வி. முடியாதென்று நினைத்துத்தான் இப்பொழுது மத்தியதரைக்கடலில் கப்பல்களை எதிர்க்க ஜெர்மானியர் விமானங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், சென்ற ஆகஸ்டு, ஸெப்டம்பர் மாதங்களில் நடந்த சண்டையில் பிரிடிஷ் விமானங்களைத் தடுத்துக்கொண்டு இங்கிலீஷ் கால்வாயில் ஜெர்மனிக்கு முன்னேறமுடியவில்லை. கப்பல் பெரிதா, விமானம் பெரிதாவென்று ஒரு முடிவும் இதுவரையில் ஏற்படவில்லை.

இந்த மாரிகாலத்தில் புதுவிதமான விமானங்களைக் கட்டிக்கொண்டு வஸந்த காலம் வந்தவுடன் ஜெர்மனி மறுமுறை எதிர்க்கலாம். ஆனால், புதுமாதிரியான விமானங்களை நாமும் கட்டியிருக்கிறோம்.

பெரிய சைனியத்தைக்கொண்டு கடலை எந்தப் பருவகாலத்திலும் தாண்ட முடியாது. பருவக்காற்று ஓய்ந்த சமயத்தில், அதாவது ஏப்ரல் அல்லது மே மாதங்களில் ஜெர்மனி படையெடுக்கலாம்.

ஆனால், மாரிகாலத்திலேயே சிறு படையெடுப்பை ஜெர்மனி ஏன் துவக்கவில்லையென்று ஒரு கேள்வி கேட்கலாம். ஜெர்மானியர்கள் பயந்து வரவில்லை என்று சொல்லக்கூடாது. ஜெர்மன் வாலிபர்கள் துணிந்தவர்கள் : சாவதற்கும் தயார். ஆனால் ஹிட்லருக்குப் போர் அநுபவமுண்டு. இருவிதப்போரையும் ஒரே சமயத்தில் நடத்தி திகிலடையச் செய்யப்பார்க்கலாம்.

பெரிய படையெடுப்பை எடுக்கும் போது ஜெர்மனி முழுபலத்தோடு தாக்கும். யுத்தம் கோரமாயிருக்கும். ஆனால், சென்ற வருஷம் நடந்த விமானப்போரில் நாம் வென்றுவிட்டோம். இனிவரும் போரிலும் நாம் அதே மாதிரி வென்றுவிட்டால் ஜெர்மனி உட்கார்ந்துவிடும்.

இது பிரிடனுக்கு இதுவரையில்லாத ஒரு சோதனைதான். சிறு படையெடுப்பாலும் கஷ்டங்கள் பல விளையக்கூடியதுதான். இருந்தாலும், நாம் வெற்றி பெறச் சாதனங்களிருக்கின்றன ; ஜெர்மனியும் வேறுவழியில்லாததுதான் படை எடுக்கும்.

ஹிட்லர் பிரெஞ்சுக்காரர்களிடம் யாசிப்பவைகள். இதாலிக்குப்போகும் பிரெஞ்சு ரயில் பாதைகளின் முக்யத்வம். ஜெர்மானியத் துருப்புகளையும் தளவாடங்களையும் கொண்டு போகும் விதம்.

டெயிலி டெலக்ராப்பின் ராஜதந்திர நிருபர் எழுதியது.

மத்தியதரைக்கடல் பிரதேசத்திலிருக்கும் பிரிடிஷாரைத் தாக்குவதற்குச் சாதகப்படும்படியான ஹிட்லரின் மூன்று வேண்டுகோள்களை அளிப்பதற்கு மார்ஷல் பிடேன் ஆக்ஷேபித்துக் கொண்டிருக்கிறாரென்றும் அவன் இணங்க மாட்டானென்றும் லண்டனில் பூர்ணமாய் நம்பிக்கை உண்டாயிருக்கிறது.

மேலும் மார்ஷல் பிடேன் காலதாமதம் செய்துகொண்டே வருகிறான். ஆனாலும், ஒரு ப்ரச்னை உண்டாகுகிறது. இம்மாதிரி தாமதத்தை ஹிட்லர் எவ்வளவு காலம் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வான். பிரான்ஸைப்பற்றிய விஷயமெல்லாம் ஹிட்லரின் பெரிய ஏற்பாடுகளின் ஒரு பாகம்தான். பிரெஞ்சு கப்பற்படையையும் மத்தியதரைக்கடலிலிருக்கும் பிரெஞ்சு துறைமுகங்களையும் தன் உபயோகத்திற்கு விட்டுவிடும்படி ஹிட்லர் மூன்று தடவை வேண்டியும், அவைகளைக் கொடுக்க பிரான்ஸ் மறுதளித்து விட்டது.

இதாலிக்குள் கொண்டுபோகக்கூடிய பிரெஞ்சு இருப்புப்பாதைகளை உபயோகப்படுத்த ஜெர்மானியர்கள் ஏற்பாடு செய்துவருகிறார்களென்று டெயிலி டெலக்ராப் பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டது. ரொம்பவும் அவசரமாக ஹிட்லர் தன்னுடைய தேவையை மறுபடியும் வற்புறுத்துகிறான். இதை நன்றாய் அறிந்துகொள்ள வேண்டுமானால், நாம் இன்னும் சிலவிஷயங்களை ஆராய்ச்சி செய்ய வேண்டும். முக்கியமாக ஸிஸிலியிலும், பல்கேரியாவிலுமுள்ள நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டும்.

ராணுவ முக்கியத்துக்காக ஸிஸிலித்தீவானது இதாலியின் அடிபாகம் பூராவும் சேர்ந்து உள்ளதென்றும், அதன் குதிபாகம் அல்பேனியா கடற்கரைக்கு எதிர்த்தாப்போல் 50 மைலுக்கு அப்பால் இருக்கும் பிரதேசமென்றும் கருதலாம். ஸிஸிலியின் மேற்குக் கடைசிபாகம் ட்யூனிஸியாவிலுள்ள பிஸெர்ட்டா என்னும் பிரெஞ்சுக் கடற்படை நிலயத்திலிருந்து 250 மைலுக்கு அப்பாலுள்ளது. அதன் தென் கோடியானது மால்டா தீவிலிருந்து 75 மைல் தூரத்திலிருக்கிறது.

ஹிட்லரும் அவனுடைய சேனாபதிகளும் இந்த ஸிஸிலிப் பிரதேசத்தை ஒரு ராணுவ நிலயமாக மாற்றி அதிலிருந்து அல்பேனியா, மால்டா, ட்யூனிஸியா இடங்களுக்கும் ஸிஸிலி ஜலசந்தியிலும் டாரெண்டோ வழியாகவும் செல்லும் கப்பல்களுக்கும் அபாயம் விளைவிக்க, அவர்களுடைய பூரா முஸ்தீபுகளையும் சேகரம் செய்துகொள்ள ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்.

விமானிகளும், தளவாடங்களும், விசாலமான சாமான்கள் ஏற்றுமதி செய்யக்கூடிய சாலைகளை உடைத்ததாயும், பிரயாணிகள் சாமான்கள் இவைகளை ஏற்றிக் கொள்ளக்கூடியதுமான இதாலியன் ரயில்வே மூலமாகத் தெற்கு நோக்கி ஏராளமாக கொண்டுபோகப்படுகின்றன.

ஆனாலும், ஸ்விட்ஸர்லாந்து நடுநிலைமை வகிக்கும்வரையில் (அதற்கு இப்பொழுது யாதொரு பயமும் இல்லையென்று ஊகிக்கப் போதுமான ராஜீயக் காரணங்கள் உள). ஜெர்மனியிலிருந்து இதாலிக்குப்போகும் ரயில் போக்கு வரவுக்கு ப்ரென்னர் கணவாய் வழியாகப்போவதில் நெருக்கடி ஏற்படக்கூடும். இந்தப் பாதையிலும் வில்லாக் வழியாகப்போகும் மற்றொரு பாதையிலும் போக்கு வரவு அதிகமாகவும் பாதை சீர்கேடு அடைந்துமிருக்கிறது. ஆகையால் ஜெர்மனியின் சேனாபதிகள் பிரான்ஸ் தேசத்தில் போகும் இரண்டு ரஸ்தாக்களை உபயோகப்படுத்த வற்புறுத்துகிறார்கள்.

இதில் முதல் மார்க்கமானது டிஜ்ஜான், லையான்ஸ், மாடேன் கணவாய் வழியாக இதாலிக்குச் செல்ல சாதகமானது. இதில் உயர்தரமான இரண்டு இருப்புப்பாதைகள் உண்டு. எல்லாவிதமான போக்குவரத்துகளுக்கும் உபயோகப்படக்கூடும்.

இரண்டாவது, மார்ஸெயில்ஸ், நைஸ், வெண்டிமிக்லியா வழியாகப் போகக் கூடியது. பிரெஞ்சு தேசத்தில் அது இரண்டு இருப்புப்பாதைகள் உள்ளது. வெண்டிமிக்லியாவுக்கும் ஜெனேவாவுக்கும் மத்தியில் ஒரே ஒரு இருப்புப்பாதையும் சில இடங்களில் மட்டும் இரண்டு இருப்புப்பாதைகளையும் பெற்றிருக்கிறது. அது பிரயாணிகளைக் கொண்டுபோக உபயோகப்படக்கூடியது. சாமான்களைக் கொண்டுபோவதற்கு அவ்வளவு அதிகமாக உபயோகப்படக்கூடியதல்ல. டுலூஸ் மார்க்கமாக ஆக்கிரமிப்பு பிரான்ஸின் தென்பாகத்துக்குச் செல்லக்கூடிய இருப்புப்பாதையானதால் அவ்விடமிருக்கும் துருப்புகளைக்கொண்டு போக பெரும்பாலும் உபயோகமுள்ளதாயிருக்கும்.

ஸிஸிலியில் ஜெர்மானியர்கள், விமானிகள், தரையிலிருக்கும் படைகள் இவைகளோடு மட்டும் திருப்தியடையமாட்டார்கள். முதல்தரமான ஒவ்வொரு நூறு விமானங்களுக்கும் சுமார் 2,500 பேர்களடங்கிய தரைப்படை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் சைனியங்களும் மற்ற யுத்ததளவாடங்களும் சேமிக்கப்படுகின்றன.

அவ்விடத்திற்கு தன்னுடைய விமான எதிர்ப்பு பீரங்கிகளையும், பீரங்கிப் படைகளையும், விமான நிலயங்களைப் பாதுகாக்கவேண்டிய சைனியங்களையும், புதிதான நிலயங்களை இதாலிய வேலைக்காரர்களைக்கொண்டு சீக்கிரமாகக் கட்டும்படி செய்ய இஞ்சினியர்களையும், இன்னும் ஜெர்மானிய ரகசியப் போலீஸாரின் அநேக தொகுதிகளையும் ஜெர்மனி கொண்டுபோகின்றது.

இந்த சேமிப்புகள் பூர்த்தியானவுடன் டாங்கிகளும், பீரங்கித்தொடர்களும், சைனியங்களும் யுத்த அவசியத்துக்குத் தகுந்தபடி கொண்டுவரப்படும்.

இந்தச் சங்கடத்தில் பிரெஞ்சு இருப்புப்பாதைகளை அடையவேண்டிய அவசியம் ஏற்படக்கூடுமென்றும் அதன் மூலம் ஒரு முடிவுக்கு வந்துவிடக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பூராவாக ஆக்கிரமணம் ஏற்பட்டாலும் சரி, இல்லா விட்டாலும் சரி, ஜெர்மனி அந்த ரயில் பாதைகளை உபயோகப்படுத்த அனுமதிக்கும்படி பிரான்ஸைக் கேட்டுக்கொள்ளுமென்பதில் சந்தேகமில்லை.

ஹிட்லரின் தந்திரத்தில் இன்னொரு பாகமென்னவென்றால்: கிரீஸ் பணியவேண்டும் அல்லது இருபக்கமும் எதிர்த்து அதை முறியடிப்பது, இவைகளுக்கு முன்போக்காக பல்கேரியாவின் பேரில் படையெடுப்பது. ஆனால் இந்தக் கிடுக்கியின் ஒரு பக்கத்தில் அதாவது இதாலியின் தென்பாகத்திற்கு கிழக்கே இருக்கும் பிரிடிஷ் கடற்படை, விமானப்படை இவைகளின் எதிர்ப்பு ஜெர்மனிக்கு ஏற்படக்கூடும்.

டான்யூப் நதியின் வடகரையிலுள்ள ஜெர்மானியத் துருப்புகள் உத்தரவு விளங்கப்பட்ட உடன்காலத்தில் யாதொரு எதிர்ப்பன்னியில் முன்னேறத் தயாரா யிருக்கின்றன.

இப்பொழுது காலநிலை சரியாக இல்லை. டான்யூப் நதியிலுள்ள பனிக்கட்டிகள் எதிர் பார்க்குமுன்னமே உருக ஆரம்பித்து விட்டன. ஆனால் மறுபடியும் உறைந்து விட்டன. ஆழ்ந்த பனிக்கட்டிகளிருக்கின்றன. இந்த சமயம் யுத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது ரொம்பவும் சிரம சாத்தியமான காரியம். ஆனால் ஸிஸிலியின் சீதோஷ்ண ஸ்திதி அவ்வளவு கெடுதலாக இல்லை. ஜெர்மனியின் தலைவரின் ஆத்திரத்துக்கு இது சாதகமாயிருக்கிறது.

இந்த ஆபத்து நெருங்க நெருங்க, பிரெஞ்சு ஒலி பரப்புகள் மூலமாக பிரெஞ்சு சைனியத்துக்கு வேண்டிய நபர்களைச் சேகரிக்க விண்ணப்பங்கள் அடிக்கடி செய்யக்கூடும். இதன் மூலம் எதிர்ப்பைப்பற்றி பிரெஞ்சு வாலிபர்களின் மனோ பாவத்தை அறியவும், அந்த மனோபாவத்தை அதிகப்படுத்தவும் அநுகூலமாய் இருக்கும்.

சமாதான ஒப்பந்தப்படி இப்பேர்ப்பட்ட விண்ணப்பங்களை நியாயப்படி செய்யலாம். சென்ற யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மன் துருப்புகள் எப்படி மாறுதல் அடைந்ததோ, அதேபிரகாரம் பிரெஞ்சு சைனியமானது நிர்ப்பந்தத்தை ஒழித்து, மனதாரச் சேர்ந்துகொண்ட நபர்களையுடைய ஒரு சேனையாகமாறி வருகிறது. ஆகையால் பழைய சைனியங்கள் கலைக்கப்பட்ட பொழுது, தானுக ராணுவத்தில் சேர்ந்து கொள்ளக்கூடிய நபர்களைக்கொண்டு ஒரு சேனை தயாரிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பாஸிஸம் இறந்துவிட்டது.

அதன் பிணத்தை நாஸிகள் காப்பாற்றிவருகிறார்கள் என்பதாக ஒரு பிரபல நிருபர் சொல்லுகிறார்.

சிகாகோ டெயிலி நியூஸ் பத்திரிகை யுத்த நிருபர் மிஸ்டர் லெலாண்ட் ஸ்டோவ் என்பவர் ஐரோப்பா யுத்த முனைகளில் சுமார் $1\frac{1}{2}$-வருஷம் கழித்தவர். இதாலிய கிரேக்க யுத்தத்தை கவனித்தவர். இப்பொழுது நியூயார்க்குக்குத் திரும்பி வந்து விட்டார். இதாலியில் இருக்கும் நிலைமையைப்பற்றி தன் அபிப் பிராயத்தை பின்வருமாறு தெரிவிக்கிறார் :—

இதாலியில் பாஸிஸம் என்பது இனிமேல் கிடையாது. பாஸிஸ்ட் பிணத் தைத்தான் நாஸிகள் செப்புக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். ஜெர்மன் துருப்புக் களின் முழு அதிகார பலத்தினால்தான் இதாலி இன்னும் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இதாலியில் ஏற்கனவே எவ்வளவு ஜெர்மன் துருப்புகள் இருக்கிறது என்று என்னால் சொல்லமுடியாது. ஆனால் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் சுமார் 2,00,000 முதல் 3,00,000-வரை சேரும் என்று கூறுவேன்.

மிகவும் • கடுமையான குளிர்காலந்தான் கிரேக்கப் படை வலோனு பிரதேசத்தை பிடித்துக்கொண்டு இதாலியர்களை சமுத்திரக்கரைக்கு விரட்டி விடாமல் தடுத்துவந்தது. இதாலியப் படைக்கு பலத்த ஜெர்மன் உதவி சீக்கிரத்தில் அனுப்பினுலொழிய, இதாலி யுத்தத்திலிருந்து பூருவும் விலகிக்கொள்ளும். இதாலியர்களாகமட்டில் ஜயமாக திரும்பிவர முடியும் என்பது சந்தேகம். அப்படி நடக்கவேணுமானுல் ஹிட்லர் ஒரு 500 பாம்பர்களை (என்னும் வெடிகுண்டு போடும் ஆகாயவிமானங்கள்) யுத்த முனைக்கு அனுப்புவதுதான் ஒரே வழி.

கிரீஸ் தேசத்தில் இதாலியர்கள் தோல்விக்கு முதல்காரணம் யுத்தம் ஒரு சாதாரண கவாத்துமாதிரிதான் என்று முஸோலினி நினைத்தது. இரண்டாவது, இதாலியர்களின் மட்டமான ஆள்மாகாணம்; மூன்ருவது, ஆகாயப்படையைக் கொண்டு யுத்த சேகரிப்பு இடங்களையும் போக்குவரத்து சாதனங்களையும் அழிக்காமல் யுத்தத்தில் சேராத அசேஷ ஜனங்களை பயமுறுத்த உபயோகப் படுத்திக் கெடுத்துக்கொண்டதாகும்.

கிரீஸ் பிரதம மந்திரியான ஜெனரல் மெடாக்சாஸ் திடீரென்று இறந்து விட்டதால் கிரேக்கரின் யுத்த தயாரிப்புக்குக் கொஞ்சங்கூடக் குறைவில்லை. ஒருவேளை யுத்த ஆரம்பத்திலேயே அவர் இறந்துபோயிருந்தால் ஆபத்தாக முடிந்திருக்கலாம். முஸோலினியின் சைனியக் கூட்டங்களை ஒழிப்பதில் பிரிடிஷ் யுத்த விமானங்கள் ரொம்ப முக்கியமான பங்கெடுத்துக்கொண்டன.

“சந்தர்ப்பம் வாய்க்கிறபொழுது நகைக்கலாம்.”

இந்தப் பழமொழி யுத்தம் நடந்துகொண்டிருக்கும் பொழுதும் பொருத்தமுள்ளது.

நாஸிகள் இருக்கும் ஜெர்மனியில் உலாவிக் கொண்டிருக்கும் தமாஷ்களில் சிலவற்றை இங்கு கூறுவோம்.

1. ஒரு பன்றியும், ஒரு நாயும், ஒரு வெள்ளாடும் ஜெர்மனிக்குச் சென்றன. உடன் காலத்திலேயே பன்றி திரும்பிவந்து சொன்னதாவது “அங்கு பயங்கரமாயிருக்கிறது. ஜெர்மானியர்கள் மலங்களையெல்லாம் சாப்பிடுகிருர்கள். எனக்குச் சாப்பிட ஒன்றும் பாக்கியில்லை.”

நாய் கொஞ்ச நாளைக்கெல்லாம் திரும்பிவந்து சொன்னதாவது “அங்கு பயங்கரமாயிருக்கிறது. என்னுல் குலைக்கக்கூட முடியவில்லை. ஜெர்மனியில் ஒரே ஒரு மனிதனைத்தான் குலைக்க அனுமதித்திருக்கிருர்கள்.”

ஆறு மாதங்கள் கிரமித்து வெள்ளாடு திரும்பிவந்து சொன்னதாவது “அங்கு பயங்கரமாகத்தான் இருக்கிறது. நான் எல்லைச்சரகத்தை அடைந்த பொழுது என்னுடைய மூக்கையும் என்னுடைய தாடியையும் ஜெர்மானியர்கள் உற்றுநோக்கி நான் ஒரு யூதனுக இருக்கவேண்டுமென்று சொல்லி என்னைக் காவல் முகாமுக்கு அனுப்பிவிட்டார்கள்.”

2. நாடகக் கொட்டகைக்குப் போகும்பொழுது ஹிட்லர் முன்வரிசையில் ஏன் உட்காருகிருனென்று உங்களுக்குத் தெரியுமா? ஏனென்ருல், இந்த ஒரு இடத்தில்தான் ஹிட்லரைப் பின்பற்றி ஜனங்கள் திரண்டு இருக்கிருர்கள்.

3. இகழக்கூடிய "சுத்தி செய்தல்" என்னும் ஒரு செய்கையை ஹிட்லர் ஆரம்பித்தபொழுது நூற்றுக்கணக்கான ஜெர்மானியர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய எண்ணத்துடன் "ஸ்டார்ம் துருப்புகளில்" சேர்ந்துகொள்ள ஏராளமாய் வந்தார்கள்.

ஒருநாள் ஒருவன் பெர்லின் நகரத்திலுள்ள ஒரு முக்கியமான ரஸ்தாவில் போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் ஜனங்கள் வெறுப்புடன் மதிக்கக்கூடிய உடுப்புகளைப் போட்டுக்கொண்டிருக்கும் தன் சிநேகிதனைக்கண்டு வினவினுன். "இது என்ன ஆச்சரியம், பொதுஉடமைக் கக்ஷியில் வெகுகால மாக ஈடுபட்ட நீயா இந்த ஸ்டார்ம் துருப்புகளின் உடையைத் தரித்துக்கொண்டு இருக்கிருய் !"

அவனுடைய சிநேகிதன் சொன்னதாவது "வாஸ்தவம். அதில் என்ன பிசகு. அவர்களுக்கும் எனக்கும் அத்யந்த சிநேகிதம். எங்கள் வகுப்பிலிருக்கும் இரண்டு நாஸிகளைப்பற்றியோவென்ருல், நாங்கள் அவர்களிருவரோடும் ஒரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளுவதில்லை!"

4. பெர்லினுக்கு அருகாமையிலுள்ள ஒரு சிற்றுண்டிச்சாலையின் ஸ்வான் தாரை ஒரு சுற்றுப்பிரயாணி "உன் வியாபாரம் எப்படி இருக்கிறது" என்று கேட்டான். "ரொம்பவும் நன்ருய் நடக்கிறது" என்று அவன் பதிலளித்தான். "ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்ததுமுதல் வியாபாரம் விருத்தியடைகிறதென்பது வாஸ்தவம்தான் போலிருக்கிறது" என்று பிரயாணி சொன்னுன்.

அந்த முதலாளி ஆச்சரியத்துடன் சொன்னதாவது "இப்பொழுது விஷயங் கள் விநோதமாக இருக்கின்றன. ஒரு தேசம், ஒரு தலைவர், இங்கு வருபவரும் ஒருவர்."

5. ஹிட்லரும் கோயரிங்கும் பால்டிக் சமுத்திரக் கரைக்கு ரகசியமாகச் சென்ருர்கள். அவர்கள் ஒரு தள்ளுபடகை வாடகைக்கு அமர்த்திஞர்கள். கோயரிங் துடுப்புகளை எடுத்துக்கொண்டான். ஹிட்லர் அவனுக்குப் பின்னுல் உட்கார்ந்துகொண்டான். அவர்கள் கரையிலிருந்து கண்ணுக்கு எட்டமுடியாத தூரம் கடந்தபொழுது, ஹிட்லர் ஜாக்கிரதையாகச் சுற்றிலும் பார்த்துவிட்டுச் சொன்னதாவது "இப்பொழுது என்னுடைய ஏற்பாட்டை நிறைவேற்றட்டுமா?"

கவலையுடன் கோயரிங் ஹிட்லரை "நீ என்ன செய்யப் போகிருய்" என்று கேட்டான். ஹிட்லர் முன்னுல் குனிந்துகொண்டு மெதுவாகச் சொன்னுன் "ஜலத்தின் பேரில் நடந்துசெல்லக்கூடிய ஒரு வித்தையைச் செய்ய முடியுமா என்று நான் பார்க்கப்போகிறேன்."

6. ஜெர்மானியர்களில் அநேகர், ரீக்ஸ்டாக்கில் நடந்த தீவிபத்தானது, பொதுஉடமைக் கக்ஷிக்காரர்கள் பேரில் பழி சுமத்தவேண்டி செய்த ஒரு ஏற்பாடு என்று நம்புகிருர்கள். இந்த சம்பவம் சம்பந்தமாக ஒரு பரிகாசமான விஷயம் உலாவுகிறது.

"கோயரிங் இருக்கும் அரைக்குள் ஒரு சேவகன் ஓடிவந்து "ஐயா, உங்கள் ரீக்ஸ்டாக் சபை எரிந்து கொண்டிருக்கிறதென்று" கூவினன். தன்னுடைய கைகடிகாரத்தைப் பார்த்துவிட்டு கோயரிங் சொன்னதாவது "என்ன, ஏற்கனவே அது எரிந்திருக்கவேண்டுமே."

7. ஹிட்லரும் கோயரிங்கும் ஒரு சமயம் மோட்டாரில் சவாரி செய்து கொண்டு, ஒருவருக்கொருவர் ராஜீய ரகசியங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒரு முக்கத்தில் சற்றுத் தங்கியபொழுது, மற்றொருவண்டி அவர்கள் பக்கத்தில் வந்தது. அதிலிருந்த இரண்டு மனிதர்கள் கொட்டாவி விட்டார்கள். "இவர்கள் நாங்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆகையால் இவர்களைக் கைதுசெய்" என்று அங்கிருந்த பாராக்காரனுக்கு கோயரிங் உத்தரவிட்டான்.

8. ஒரு புலி பெர்லினிலுள்ள கண்காக்ஷியிலிருந்து தப்பி ஓடி நகரத்துக்கு வெளியேயிருக்கும் கிராமங்களை நாசம் செய்தது. அந்தப் புலியை உயிரோடாவது, அல்லது கொன்றுவது பிடித்து வருகிறவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று பிரசுரிக்கப்பட்டது. இரண்டு யூதர்கள் இந்த அறிக்கைகளைப்படித்தார்கள். திடீரென்று ஒருவன் பயந்து மற்றொருவனிடம் மெதுவாகச் சொன்னதாவது "நம்மை ஜெர்மானியர்கள் சுட்டுக்கொல்லுமுன் நாம் தப்பி ஓடவேண்டியதுதான்."

இதைக்கேட்டு வியப்புடன் மற்றொருவன் சொன்னதாவது "நாம் புலி அல்லவே. நாம் ஏன் ஓடவேண்டும்". முதல் யூதன் பதிலளித்தான் "இது எனக்குத் தெரியும். ஆனாலும் நாம் புலியல்லவென்று எப்படி ருஜுப்படுத்த முடியும்?"

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

பொதுஜனங்களை விமானங்களால் எதிர்க்க ஆரம்பித்தது யார்?

இனிவரப்போகும் விமானப்போரில் ஜெர்மனி பொதுமக்களை, முன்போல் எதிர்க்கக் கூடும். இந்த அக்கிரமத்தை பிரிடன்தான் முதலில் ஆரம்பித்ததாகவும் ஜெர்மனி பழிக்குப்பழி வாங்குவதற்காகத் திருப்பிச்செய்வதாயும், அதனால் பிரிடிஷ் மக்களுக்குண்டாகும் சேதத்துக்கு பிரிடனே பொறுப்பாளியென்றும் சிலநாட்களாக (உதாரணமாக பிப்ரவரி 19-ல்) ஜெர்மனி பிரசாரம் செய்து வருகிறது. இதற்கு அத்தாட்சியாக, பிரிடன்மேல் ஜெர்மனி விமானப்போர் துவக்குவதற்கு முன்னமே—அதாவது 1940 மே மாதத்திலேயே பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனிக்குள் புகுந்து ஆக்ரமித்ததாகச் சொல்லப்படுகிறது,

இது பொய். 1939 ஸெப்டம்பர் மாதத்திலே ஜெர்மனி இந்த அடாத காரியத்தை ஆரம்பித்து, போலண்டில் உள்ள நகரங்களையும், பட்டணங்களையும், கிராமங்களையும், ஓடிஒளியும் ஜனங்களையும் சுட்டதோடுகூட, வார்ஸா என்ற

அழகான நகரத்தை விமானங்களால் எதிர்த்து, அங்குள்ள 50 ஆஸ்பத்திரிகளையும் சாக்கடைகளையும், தண்ணீர்க் குழாய்களையும் உடைத்தது மறந்துபோகவில்லை. இதை நேரில் பார்த்த அமெரிக்க, எகிப்து, ஸ்காண்டிநேவிய பத்திராதிபர்களும், ஸ்தானிகர்களும் சாக்ஷியம் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கோர எதிர்ப்பைப் படம் பிடித்து, 'அக்னி-ஸம்ஸ்காரம்' என்று பெயரிட்டு நடுநிலைமை நாடுகளில் ஸினிமாவில் காண்பித்தார்கள். அப்பொழுது நடுநிலைமைவகித்த இதாலிகூட இதைப்பார்த்துத் திடுக்கிட்டது.

ஜெர்மன் விமானங்கள் கண்ட இடங்களில் குண்டுகளைப்போட்டாலும், பிரிடிஷ் விமானங்கள் ராணுவ நிலயங்களைமட்டும்தான் எதிர்க்கும். ஆனால், ஆஸ்பத்திரிகள், சிசு போஷணசாலைகள், தொழிலாளிகளின் வீடுகள், திறந்த வெளிகளைத்தான் பிரிடிஷ் விமானங்கள் தாக்குவதாக, ஜெர்மனி பிரசாரம் செய்துவருகிறது.

இந்தப் பொய்யை ஒட்டி, கடைசியாகச் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று, ஜெர்மனிக்குள் பிரிடிஷ் விமானங்கள் நுழையவில்லையென்று சொல்லப்பட்டது. ஆனால், உண்மையில், அன்று, ஜெர்மனியின் வழியாய், 1,800-மைல் பறந்து போலண்டிலிருக்கும் கிராகாவ், கடோவிகே நகரங்களில் துண்டுபத்திரிகைகளைப் போட்டு மறுபடி ஜெர்மனி வழியாகவே பிரிடிஷ் விமானங்கள் திரும்பிவந்தன. இதுவரையில் இவ்வளவு தூரம் பிரிடிஷ் விமானங்கள் போனதில்லை.

ஜெர்மனியின் ஜோஸ்யங்கள்.

ஜெர்மனி இனிச்செய்ய நினைத்திருக்கும் சூழ்ச்சி என்னவென்று புரியவில்லை. அதை மறைப்பதற்காக பால்கன் நாடுகளில் பலவிதமான வதந்திகளைக்கிளப்பி விட்டு, அதோடு பிரிடனை சீக்கிரத்தில் படையெடுக்கப்போவதாக பலமாகப் பிரசாரம் செய்கிறது. 'முடிவானயுத்தம் இனி நடத்தப்படும்—பிரிடன் தோற்க வேண்டியதுதான்' என்று ஒரு ஜெர்மன் பத்திரிகை (வோயல்கேஷர் பியோ பாக்டர்) எழுதுவதாக பிப்ரவரி 23-ம் தேதி ஜெர்மனி ஒலிபரப்பிற்று.

இதைப்போல, சென்ற வருஷமும் ஒலிபரப்பிய சில ஜோஸ்யங்களைக் கீழே காணலாம் :—

1. 'ஜெர்மன் பீரங்கிகள் லண்டனைப் பொடியாக்கிவிடும் : ஜெர்மானியர் பிரவேசிப்பதற்குள்ளாக லண்டன் வாசிகள் பீரங்கிகளுக்கிரையாவார்கள். லண்டனில் மனுஷ்யசஞ்சாரமில்லாது நிசப்தமாய்விடும்'. (ஜூலை 18 : பிரான்ஸ் தோற்றுப்போய், பிரிடனுக்கு அபாயமேற்பட்ட சமயம்).

2. 'ஜெர்மன் விமான எதிர்ப்பைப்போல் இதுவரையில் உலகத்திலேற் பட்டதில்லை'. (ஆகஸ்ட் 17 : லண்டனை பகற்காலத்தில், பல விமானங்களைக் கொண்டு எதிர்த்தபோது).

3. 'லண்டன் அடியோடு பாழாய்போயிற்று' (ஸெப்டம்பர் 11: ஸெப்டம்பர் மத்தியில் பெரிய-விமான எதிர்ப்பை முன்னிட்டுச் சொன்னது).

4. 'வேவுபார்த்ததில், லண்டன் நகரம் அடியோடு அழிந்துவிட்டதாகத் தெரிகிறது' (ஸெப்டம்பர் 19 : இதற்குள்ளாக, படையெடுத்த ஜெர்மன் விமானங் களை பிரிடிஷ் விமானங்கள் த்வம்சம்செய்து விட்டன.)

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

நாஸிகளின் மதம்.

ஜெர்மனியிலிருக்கும் தேவஸ்தானங்களிலிருந்து யுத்தத்துக்கு திரவிய உதவிவருவதாக பிப்ரவரி 20-ம் தேதி ஜெர்மன் ஒலிபரப்பு பெருமையடித்துக் கொள்ளுகிறது. ஆனால் நாஸிகள் சரியான கிறிஸ்துவர்கள் இல்லையென்று கீழ்க்கண்டவாக்கியங்களிலிருந்து வெளியாகும்:—

1. 'கிறிஸ்து ஜெர்மனியில் அவதரித்து ஹிட்லர் வாக்கில் விளங்குகிறார். (டாக்டர் ரெவெரெண்ட் ல்யூதியூஸர்-பிரான்க்ஷ்வாட் 1934 பிப்ரவரி 8).

2. 'ஜெர்மானியருக்கும் கடவுளுக்கும் மத்தியில் ஹிட்லர் நிற்கிறார். அவர் சொல்லுவதெல்லாம் வேதம். அதில் ஆழ்ந்த தத்துவங்களிருக்கின்றன. (டாக்டர் கோயபல்ஸ் 1936 மார்ச்சு 29).

3. 'ஏசுநாதரைவிட, ஹிட்லர் அதிக சக்திவாய்ந்த பெரிய புது அவதாரம்—அவர்தான் கடவுள்—போப்பாண்டவரும் அவர்தான்'. (பின்னே என்ற நாஸித் தலைவர்—ஸாயர் புநக் லான்டிஸ்ஸிடங்க் பத்திரிகையில் எழுதியது).

தொத்துவியாதிகள் இந்தியாவில் பரவிவிட்டதாக ஜெர்மனி பொய்ப் பிரசாரம் செய்கிறது.

பிப்ரவரி 21-ல் இந்துஸ்தானியில், பம்பாயிலிருக்கும் தொத்துவியாதிகளைப் பற்றிய ரிபோர்ட்டுகளை வைத்துக்கொண்டு இந்தியர்களுடைய சுகாதாரத்துக்கு பிரிடிஷ் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லையென்று ஜெர்மனி குற்றம் கண்டு பிடிக்கிறது.

அம்மையைப்போல, பல தொத்துவியாதிகள் நடப்பு மாதங்களில் வரத்தான்செய்யும். அரசாங்கம் கவனியாமலில்லை. இந்த ஒரு வருஷத்தில் 100-க்கு 13·4 பங்கு ஜன அபிவிருத்தியாயிருக்கிறது. சென்ற 60 வருஷங்களில் இப்படி கிடையாது. ஜனத்தொகை, பஞ்சங்களையும், தொத்து நோய்களையும் பொறுத்திருக்கிறது. 18 வருஷங்களாக இந்தியாவில் பெரிய தொத்து நோய்களே கிடையாது.

பிரிடனுக்கு வேண்டிய இரும்பு (எஃகு) இருக்கிறது.

பிரிடனில் இரும்புப்பஞ்சம் ஏற்பட்டு, பார்லிமெண்ட் சபைக் கட்டிடத்தைச் சுற்றிவைத்திருக்கும் இரும்பு வேலிகளை எடுத்துருக்கி, 15-டன் இரும்பைச் சேர்த்திருக்கிறார்களென்று இந்துஸ்தானியிலும், பாரஸீகத்திலும் பிப்ரவரி 17-ல் ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது. நவம்பர் 27-ல், மிஸ்டர் ஆர்தர் கிரீன்வுட் சொன்னபடி, முன்னைக்காட்டிலும் யுத்த தளவாடங்கள் 3 பங்கும், ஆயுதங்கள் 4 பங்கும் அதிகமாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து ஏராளமாக இரும்பு கிடைக்கும். உலகத்தில் மற்ற இடங்களில் எடுக்கப்படும் இரும்பைக்காட்டிலும் யுனைடெட் ஸ்டேட்ஸில் அதிக இரும்புண்டு. 1941-ல் 800-லக்ஷம் டன் அதிகமாக எடுக்கப்போகிறார்கள்.

துருக்கிக்கும், பல்கேரியாவுக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தம்.

இதைப்பற்றி, இந்துஸ்தானி, அராபி, பாரஸீக பாஷைகளில் பிப்ரவரி 21-ல் ஒலிபரப்பும்போது ராஜ்ஜிய தந்திரத்தில் பிரிடன் தோல்வியடைந்ததாக ஜெர்மனி அபிப்பிராயப்படுகிறது. அக்ஷம் என்ற துருக்கிப்பத்திரிகை சொல்லுகிறபடி, இதனால் துருக்கிக்கும் பிரிடனுக்கும் ஏற்பட்டிருக்கும் சிநேகத்துக்கு ஒரு குறைவுமில்லை. இவர்களுக்குள்ளேற்பட்டிருக்கும் உடன்படிக்கை சாச்வதம்; இரு தேசங்களும் மனமொப்பிச் செய்துகொண்ட ஒப்பந்தம்.

முக்கியமான விளம்பரம்.

யுத்த சம்பந்தமான புகைப்படங்கள்.

ஈ-தர்பார் அவர்கள் உத்தரவின் பேரிலும், அவர்களின் அன்பார்ந்த உதவியின்பேரிலும், புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் மெம்பர்கள் இதுமுதல் பிரசங்கங்களுக்கு வெளியூர்களுக்குப்போகும் காலத்தில்யுத்தத்தின் வெவ்வேறு அம்சங்களை விளக்கிக்காட்டக்கூடிய புகைப் படங்களின் கோர்வைகளையும் எடுத்துக்கொண்டு போய் ஜனங்களுக்குக் காண்பிக்க வசதி ஏற்பட்டிருக்கிறதென்று யுத்த அறிக்கை நிலயம் சந்தோஷத்துடன் அறிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் 'இருபதாவது நூற்றுண்டு பாக்ஸ் பிலிம் கம்பெனி'யாரால் எடுக்கப்பட்ட புகைப்படங் களும், பம்பாய் துரைத்தனத்தாரைக்கொண்டு இந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கும் ஒரு சங்கத்தாரால் இந்தியா சம்பந்தமான சில விஷ யங்களைப்பற்றி தயாரிக்கப்பட்ட புகைப்படங்களும் சேர்ந்தவைகள். ஒவ் வொரு நிகழ்ச்சியிலும் மூன்று தனித்தனிப் படங்கள் காட்டப்படும். இந்தப் படங்கள் காண்பிப்பதால் யுத்த அறிக்கை நிலயத்தின் பிரசங்கங்களுக்கும், மேற்படி நிலயத்தின் வாரப்பதிப்பு புஸ்தகத்துக்கும் அதிக மதிப்பு ஏற் படக்கூடுமென்று யுத்த அறிக்கை நிலயம் நம்புகிறது.

புதுக்கோட்டையின் யுத்த நிதிக்காக உழைத்துவரும் கமிட்டியார் யுத்த அறிக்கை நிலயத்திற்கு ஒரு மோட்டார் வண்டியை நன்கொடை அளித்திருக்கிறுர்கள். இந்த வண்டியில் புகைப்படம் காண்பிவிக்கக்கூடிய யந்திரங்களையும், திரைகளையும், புகைப்படங்களையும் பிரசங்கம்செய்யும் ஸ்தலங்களுக்கு எடுத்துச்செல்ல சௌகரியமாயிருக்கும். ஆனல், இம்மாதிரி புகைப்படங்களோடுகூடிய பிரசங்கங்களைச்செய்ய வசதி ஏற்படுத்திக் கொள்ளவும், ஒவ்வொரு இடத்திலும் மாதாமாதம் ஒவ்வொரு புதிதான படக்கோர்வையைக்காண்பிக்கவும், பிரசங்க ஸ்தலங்களை அறுபது இடங் களுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை ஸமஸ்தான வாசிகள் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவைகள் என்ன வென்றுல் :—

(*a*) பிரசங்கங்கள் சாதாரணமாக **மாலை 6** அல்லது **6-30 மணிக்குத்** துவக்கப்படும்.

(*b*) யுத்த அறிக்கை நிலயத்தின் மோட்டார் ஒருநாளில் இரண்டு ஊர்களுக்குச்செல்ல வேண்டியிருப்பதால் பொதுஜனங்கள் **தவராமல் குறிப்பிட்ட டயத்தில்** பிரசங்கம் செய்யப் போகுமிடத்தில் ஆஜராகியிருக்க வேண்டும்.

இந்தப்படங்களை ஆயிரம் பேர்களுக்குக்குறையாமல் சௌகரியமாய்ப் பார்க்கக்கூடுமென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால் உங்கள் கிராமத்தில் பிரசங்கம் செய்யப்படுமென்று பிரசுரம் செய்த அளவில்,

அந்த இடத்தில் கூடுங்கள்,

சரியானபடி குறிப்பிட்ட டயத்தில் வாருங்கள்.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XXXIV.

1941—

					மணி.
மார்ச்சு ...	8,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
	9,	ஞாயிற்றுக்கிழமை.	வயலோகம் ...	காலை	9.30
			குடுமியாமலை ...	,,	9.45
			திருக்கோகர்ணம் ...	மாலை	5.30
	10,	திங்கட்கிழமை ...	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
			ராணி பெண்பாடசாலை...	,,	10.25
			திருமயம் ...	மாலை	5.30
			கோனுபட்டு ...	,,	6.00
	11,	செவ்வாய்க்கிழமை.	நச்சாந்துபட்டி ...	,,	5.30
			விராச்சிலை ...	,,	6.00
	12,	புதன்கிழமை ...	புதுப்பட்டி (பொன்னமராவதி).	,,	5.30
			வேந்தம்பட்டி ...	,,	6.00
	14,	வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

பிரஸங்கம் XXXV.

15,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
16,	ஞாயிற்றுக்கிழமை.	அன்னவாசல் ...	,,	6.00
		கீழக்குரிச்சி ...	,,	6.30
17,	திங்கட்கிழமை ...	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை...	,,	10.25
		நீர்ப்பழனி ...	மாலை	6.00
		ஆவூர் ...	,,	6.30
18,	செவ்வாய்க்கிழமை.	ஆலங்குடி ...	,,	6.00
		ராசியமங்கலம் ...	,,	6.30
19,	புதன்கிழமை ...	குழிபிரை ...	,,	6.00
		சுந்தரம் ...	,,	6.30
20,	வியாழக்கிழமை ...	ராமச்சந்திரபுரம் ...	,,	6.00
		ராயவரம் ...	,,	6.30
21,	வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00
		மதகம் ...	மாலை	6.00
		ஏம்பல் ...	,,	6.30

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

அதிர்ஷ்டச் சீட்டு.

(ஸ்ரீ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி எண்டெர் டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

முடிவு தேதி 15—6—41

சீட்டு குலுக்கும் தேதி 23—6—41

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

300 பரிசுகள்.

1-வது பரிசு	ரூபாய்	7,500	
2-வது பரிசு	,,	5,000	
3-வது பரிசு	,,	2,500	
2 பரிசுகள்	,,	1,000	வீதம்
5 ,,	,,	500	,,
90 ,,	,,	100	,,
100 ,,	,,	50	,,
100 ,,	,,	15	,,

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000- 8-3-41.